பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 23 புதன்கிழமை (05-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:112

## 'லங்கா முடித்த' கப்பல் மூலம் பயணிகள் சேவைக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்ரல்5

யாழ்ப்பாணத்திலும், திருமலையிலும் போக்குவரத்து வசதியின்றி நிர்க்கதி நிலையிலுள்ள பொதுமக்களின் நலன்கருதி 'லங்காமுடித்த' கப்பல் மூலம் பயணிகள் சேவையை நடத்த வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் சரத் அமுனுகம அனுமதி வழங்கியுள்ளார்.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் விடுத்த கோரிக்கையை அடுத்தே அமைச்சர் இந்த அனுமதியை வழங்கியுள்ளார். காங்கேசன்துறையில் பொருள்கள் இறக்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ள 'லங்காமுடித்த' கப்பல் அந்தப்பணி முடிந்ததும் மூன்று தடைவைகள் பயணிகள் சேவை நடத்த வேண்டுமென்று அரச அதிபர் கோரியிருந்தார். இதற்கு அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார் என்றும் -பொருள்களை இறக்கி முடித்ததும் இந்தச் சேவை நடத்தப்படும் என்றும் அரச அதிபர் உதயனுக்கு தெரிவித்தார்.

இதற்கிடையில் - திருமலையில் தங்கியுள்ள இரண்டாயிரம் பயணிகள் தமக்குப் பயணவசதி செய்யுமுகமாக கப்பல் சேவை நடத்தக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்ப ஏற்பாடு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## வில்பத்துக் காட்டுக்குள் இருந்து புலிகளே விமானத்தைச் சுட்டனர்!

### விசாரணைகளில் தெரியவந்ததாக அறிவிப்பு

அனுராதபுரத்துக்குச் சமீபமாக தலாவ பகுதியில் வீழ்ந்து நொறுங்கிய விமானத்தை வில்பத்துக் காடுகளில் ஒளிந்திருந்து 50 கலிபர் துப்பாக்கியால் விடுதலைப் புலிகளே தாக்கியுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலீசார் தெரிவித்துள்ளனர்.

சம்பவதினம் வில்பத்துக் காடுகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் இருந்தது என்று எல்லைப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் என்றும் -

வில்பத்து காட்டுப் பகுதியிலிருந்து விமானத்தின் மேலும் மூன்று சிதைந்த பாகங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் பொலீசார் தெரிவித்தனர்.

இந்தக் காடுகளில் மறைந்திருப்பதாக நம்பப்படும் புலிகளைத்தேடி நேற்று முன்தினம் பாரிய தேடுதல் நடவடிக்கையை பொலீசார் ஆரம்பித்தனர் (ஐ-3-7)

### 2 ஆயிரம் ரூபா பணம் பிரேதப்பெட்டி வாங்கவா?

# நிவாரணத்தை ஏற்க மக்கள் மறுப்பு!

# வெளியேற அனுமதிக்குமாறு கோஷம்!!

## உணவு லொறியுடன் கிளாலி சென்ற அதிகாரிகளை சூழ்ந்து ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி,ஏப்ரல்5

**பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்ல முடியாதவாறு கிளாலி காணிக்கை மாதா ஆலயப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்கள் நிவாரண உணவுப் பொருள்கள் எதுவும் தமக்குத் தேவையில்லை என்று கூறி ஏற்க மறுத்துவிட்டனர். இதனால் யாழ்.செயலக அதிகாரிகள் நேற்று அங்கு லொறிகளில் எடுத்துச்சென்ற நிவாரணப் பொருள்களை விநியோகிக்க முடியாது திரும்பினர்.**

கிளாலியிலுள்ள காணிக்கை மாதா கோயில், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 114 அகதிகளுக்கும் வழங்கவென யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் இரு லொறிகளில் உணவுப் பொருள்களை நேற்று எடுத்துச்சென்றனர்.

செயலகத் திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம், உதவித் திட்டப் பணிப்பாளர் ஆர்.நல்லையா, உதவித் திட்டமிடல் அதிகாரி எஸ்.சத்தியசீலன் ஆகியோரே இந்தப் பொருள்களை அங்கு எடுத்துச்சென்றனர்.

கிளாலியிலுள்ள இராணுவத் தடை நிலையைத் தாண்டி, மக்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள பகுதிக்கு இந்த அதிகாரிகளின் "பிக்கப்" வாக

(12ஆம் பக்கம் பார்க்க)

### பரீட்சை முடிவு இன்று வெளியாகும்

கொழும்பு,ஏப்ரல்5

கடந்த டிசம்பரில் நடந்த ஜீ.சீ.ஈ (சாதாரண) தரப்பரீட்சை முடிவுகள் இன்று பிற்பகலுக்குப் பின்னர் வெளியாகும் என்று பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு சில மாவட்டங்களின் முடிவுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டன. கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் முடிவுகள் இன்று பிற்பகலிலேயே வெளியாகவிருக்கின்றன. (ஐ-3-4)

### ஹெலி தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஏப்.5

கிளாலிக் கடற்கரைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஹெலிகள் தாக்குதல் நடத்தின.

இரு ஹெலிக்கொப்டர்களில் இருந்து சுமார் அரை மணி நேரம் மாறி மாறி றொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (ஐ-5)

## மக்களை வெளியேற்றுமாறு செஞ்.குழுவிடம் வற்புறுத்து

### மக்கள் குழு அவசர கடிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

கிளாலி மற்றும் பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசம், வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளுக்குள் சிக்குண்டுள்ள பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு கோரும் அவசரக்கடிதம் ஒன்றைச் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்துள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## பளை மற்றும் கிளாலிப் பகுதிகளில் 5 ஆயிரம் பேர் தொடர்ந்து நிர்க்கதி!

தென்மராட்சி,ஏப்ரல்5

பளை நகரம் உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப்பிரதேசத்திலும் கிளாலி மாதா கோவில் பகுதியிலுமாக மொத்தம் ஆயிரத்து 225 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 114 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற முடியாத நிலையில் உயிரைக் கையில் பிடித்தவாறு பீதியுடன் தொடர்ந்து தங்கியுள்ளனர்.

பளை நகரம், பெரியபளை, புலோப்பளை, மாசார், தம்பகாமம், சோரன்பற்று, தர்மக்கேணி ஆகிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வாகன அணி மீது நேற்று கிளைமோர் தாக்கு!

### கந்தளாய் அருகே சம்பவம்!

திருகோணமலை,ஏப்ரல்5

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் வாகனத் தொடரணி மீது நேற்றுக்காலை 11.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் பொதுமக்கள் இருவரும் உயிரிழந்தனர்.

கந்தளாய்க்கு அருகே கித்துள் ஊற்று என்னும் இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வாகன அணியின் முன்னால் சென்ற போக்குவரத்துச் சபை பஸ்ஸே கண்ணியில் சிக்கியது.

அந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநருமே கொல்லப்பட்ட பொதுமக்கள் ஆவர்.

இந்தச் சம்பவத்தில் ஏழு கடற்படையினர் காயமடைந்து தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-3-4-150)

## விமான சேவையை உடனடியாக ஆரம்பிக்கும் சாத்தியமில்லை

கொழும்பு,ஏப்ரல்5

பலாலி - கட்டுநாயக்க விமானப் பயணச் சேவையை உடனடியாக ஆரம்பிக்கும் சூழ்நிலை இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர் எம்.என். குணசேகர தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் விமானம் வீழ்ந்து நொறுங்கியமை தொடர்பான விசாரணைகள் பூர்த்தியான பின்னரே விமான சேவையை ஆரம்பிப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த விமான சேவையில் பயணம் செய்ய 2 ஆயிரம் பேர் டிக்கெட் பெற்றுள்ளனர் என்றும் -

சேவை ஆரம்பிக்கப்பட்டதும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும்-

அவர் சொன்னார்.

### ஜனாதிபதிக்கு மன்னார் ஆயர் அவசர செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்ரல்5

பளை மற்றும் அயல்கிராமங்களில் உள்ள 4 ஆயிரத்து 600 பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர யாழ். கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்தின அனுமதி வழங்கியபோதும் அந்தப் பிரதேசப் படை அதிகாரிகள் மக்களை வெளியேற அனுமதி அளிக்கவில்லை. எனவே இந்த விடயத்தில் உடன் தலையிட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கும்படி உத்தரவிடுங்கள்

மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசப் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றிரவு ஜனாதிபதிக்கு அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்பிவைத்தார். (ஐ-3)

### சங்கத்தானையில் கிரனேட் வீச்சு!

சாவகச்சேரி,ஏப்.5

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் - சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகே - நேற்று முற்பகல் 10-30 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் அப்பகுதியில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். (ஐ-31)

### மூதாட்டிகளைக் காணோம்!

தென்மராட்சி,ஏப்.5

வடமராட்சி கிழக்கு குடாரப்புப் பகுதியில் சகோதரிகளான இரு வயோதிபப் பெண்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டைச் சகோதரிகளான சிதம்பரப்பிள்ளை கனகம்மா (வயது 80) கணபதிப்பிள்ளை நாகம்மா (வயது 80) ஆகிய இருவரையுமே காணவில்லை என இவர்களது பிள்ளைகள் தேடிக் கொண்டிருக்கின்றனர். (ஐ-117-31)

### இத்தாவிலில் பெண் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஷெல் வீச்சினால் காயமடைந்து பெண் ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டார்.

கந்தையா சரஸ்வதி (வயது 42) என்பவரே நெஞ்சில் காயமடைந்துள்ளார். இச்சம்பவத்தில் இவரது தாயாரான கந்தையா வள்ளிப்பிள்ளை (வயது 90) என்பவரும் காயமடைந்தார். அவர் தள்ளாடும் வயதில்நடக்க முடியாததால் ஆஸ்பத்திரிக்கு அழைத்துவரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பளை மாணவருக்கு அழைப்பு

பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களையும் ஜி.சீ.ஈ. (உயர்தரம்) வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களையும், தரம் ஐந்தில் கற்கும் மாணவர்களையும், இந்த மாணவர்களின் பெற்றோர்களையும் நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் சமுகம் அளிக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது ஆருயிர் நண்பி
நவசித்தியின் பாசமிகு தந்தையாரான
**திரு. வை.பழனித்துரை**

அவர்கள் 06-03-2000 அன்று அமரத்துவம் அடைந்தமை இட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(75086) **- 99 A/L நண்பிகள்.**


## தேவை

அலுமினியத் தொழிற்சாலைக்கு
ஸ்பின்னர் தேவை

தகுதி உடையோர்
உடன் தொடர்பு
கொள்ளவும்.

**இல. 18, சிவன்வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.**

(75053)


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சிவதொண்டா ஏரம்பு தம்பு**
(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்,
புங்குடுதீவு பல நோ.கூ.சங்கம்)

அவர்கள் 31-03-2000 வெள்ளிக்கிழமை மரணமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

க.கோபாலபிள்ளை
(கணக்காளர்)
குடும்பத்தினர்.

*1ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.*

(75104)

## காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் வருடாந்த மகோற்சவ விழா



**விடிவு தர கொடியேற்று வேழமுக நாயகா!**

துதி செய்ய உன்னைச் சூழ்ந்தோம்
துவஜாரோகணம் காணும் தும்பிக்கையானே
பதியெனவே விளங்கும் கற்பக விநாயகனே
படுந்துயர் தீர்த்திட வேண்டுமையா!
விதியினை நோவதா வேழமுகத்தவனே
விடிவினைத் தந்தருள வேண்டுமையா!
கதியென உன்கழல் பற்றினோம்
காரை வாரிவளவு கற்பகவிநாயகனே கா!

**இன்று (05-04-2000) புதன்கிழமை**
வாரிவளவு கற்பகவிநாயகப்பெருமானின் கொடியேற்றதினம்

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,**
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (1636)


## லிபேட்டி

அச்சுவேலி
ஆனந்தபாபு, மோகினி
நடிப்பில்
நான் பேசு
நினைப்பதெல்லாம்
காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
Fax No.0094 - 70212223
(74706)

## ராஜா

யாழ்ப்பாணம்
4 ஆவது வெற்றி வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன், சிவாஜி
மற்றும் பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்
10.30, 2.30
(C/11604)

## நாகம்ஸ்

சுன்னாகம்
ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா
நடித்த
**அம்மன்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களைப் பேய்களுக்காகக்
கொலை செய்யும்
சம்பவங்கள் நிறைந்த படம்
(75070)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
23 - 01 - 1936



மறைவு
06 - 03 - 2000

அமரர்
**வைத்திலிங்கம் பழனித்துரை**
(உரிமையாளர், இந்திரன் ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்)

**மாதம் ஒன்று ஓடி மறைந்தது. நீங்கவில்லை எங்கள் துயரம் பாசமாய் வளர்த்து எம்மை பாரினிலே பரிதவிக்க விட்டீரோ வாஞ்சையுடன் இனி அப்பா என்று யாரை அழைப்போம். என்றென்றும் உங்கள் நினைவுகள் எமைவிட்டு அகலாது.**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.**

தங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்.**

*அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.*

(75015)

உ

## ஜீவா திருமண அழைப்பு சுகி



**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"**



அன்புடையீர்!

*நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனி மாதம் 24 ஆம் நாள் (06-04-2000) வியாழக்கிழமை துதியைத் திதியும் அச்சுவினி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய முற்பகல் 10. 34 முதல் 12. 10 வரையுள்ள மிதுனலக்கின சுபவேளையில்*

புலோலி தெற்கு,
புலோலி
அரசரத்தினம் - தவமணி
தம்பதியினரின்
தவப்புதல்வன்
**ஜீவரத்தினம்**
அவர்களுக்கும்



உடுவில் கிழக்கு
உடுவில்
கண்ணுத்துரை - ஞானசௌந்தரி
தம்பதியினரின்
சிரேஷ்ட புதல்வி
**சுகித்தா**
அவர்களுக்கும்

இறைவன் துணைகொண்டு ஸ்ரீ வத்சா, 46 B 3 ஆவது அவனியு,
அண்ணா நகர், சென்னை - 40இல் அமைந்துள்ள கல்யாண மண்டபத்தில

*திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**தங்கள் நல்வரவை நாடும்:**

திரு. திருமதி அரசரத்தினம்,
18/15, சாந்தம் கொலனி,
அண்ணாநகர் மேற்கு,
திருமங்கலம், சென்னை. 600040.

A. Nirmalan,
43, Rixon House,
Bom field Road,
London,
5E-183 Tx - UK.

திரு. திருமதி கண்ணுத்துரை.
9/9, சாந்தம் கொலனி,
அண்ணாநகர் மேற்கு,
சென்னை. 600040

K. Sutharsan,
102, Suther Land Road,
Croydon,
Surry CRO 3 CJ,
London.

*தகவல்: சுதா புத்தகசாலை தொலைத்தொடர்பகம்
கொக்குவில்.*
**T.P: 021-2954**

(75944)

# ஏப்ரல் முட்டாள் தினத்தில் பஸ் மீது பார்சல் ஒன்றை வீசினார்களாம்

## மூன்று இளைஞர்களுக்கு விளக்க மறியல்

நெல்லியடி, ஏப்ரல் 5

ஓடிக் கொண்டிருந்த பஸ் மீது பார்சல் ஒன்றை எறிந்ததன் மூலம் அந்த பஸ்ஸின் கண்ணாடிகளை உடைத்து சுமார் 30 ஆயிரம் ரூபா வரையில் நஷ்டம் விளைவித்ததாகக் கூறப்படும் இளைஞர் மூவரை இம் மாதம் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் கடந்த முதலாம் திகதி ஏப்ரல் முட்டாள் தினத்தன்று தொண்டமானாறில் இடம்பெற்றது.

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவுக்குச் சொந்தமான 62 ஸ்ரீ 4775 இலக்க பஸ் மீதே குறித்த நாளன்று காலை 7.50 மணியளவில் மூன்று இளைஞர்களினால் பார்சல் வீசப்பட்டதாக இந்த பஸ் சாரதி தனபாலசிங்கம் யோகராசா (வயது 45) வல்வெட்டித்துறைப்பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இச் சம்பவத்தில் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்படும் தொண்டமானாறைச் சேர்ந்தவர்களான முத்துலிங்கம் சுதானந்தன் (வயது 26), சின்னராஜா ராஜ்சுதன் (வயது 25), இராஜரட்ணம் விஜயனந்தன் (வயது 27) ஆகிய மூவரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப்பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

மறுநாள் 2ஆம்திகதி காலை குறித்த மூவரையும் வல்வெட்டித்துறைப்பொலீஸார், பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதனின் வாசஸ்தலத்தில் ஆஜர் செய்த சமயம் இவர்களை இம்மாதம் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(இ-109-173)

## லொறி - டிரக் விபத்து

நெல்லியடி, ஏப்ரல் 5

மந்திகைச் சந்தியில் நேற்று முன்தினம் மாலை 4 மணி அளவில் இடம்பெற்ற லொறி-இராணுவ டிரக் விபத்தில் இராணுவ வாகனத்தின் முன்புறம் சேதமானது.

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறியும் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து மந்திகை இராணுவ முகாமுக்கு வந்து கொண்டிருந்த டிரக்குமே விபத்தில் சிக்கின. (இ-109)

## வலுக்குறைந்த மின்சாரம்

நீர்வேலி தெற்குகந்தசுவாமி கோவில் பகுதி வரை வழங்கப்பட்டு வரும் மின்சாரம் வலுக்குறைந்து இருப்பதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மின் குமிழ்கள் பிரகாசம் இன்றி ஒளிர்வதாகவும் அத்துடன் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகவும் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை —

கந்தசுவாமி கோவில் வரை வழங்கப்படும் மின்சேவையை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## பாடசாலை விடுமுறை

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் முதலாம் தவணைக்கான பரீட்சைகள் முடிவடைந்ததும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பாடசாலைகள் யாவும் விடுமுறைக்காக மூடப்படவுள்ளன.

மீண்டும் இம்மாதம் 24 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஜூலை 28 ஆம் திகதிவிடுமுறைக்காக மூடப்படும். (இ-10)

# வெள்ளவத்தையில் தேடுதல்; 4 பெண்கள் உட்பட அறுவர் கைது

கொழும்பு, ஏப்ரல் 5

கொழும்பில் வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை திடீர்த் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட பொலீஸார் ஆறு தமிழர்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கள் காலை 4 மணி முதல் காலை 7 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின் போது 4 தமிழ் யுவதிகளும் 2 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். ஐந்நூறு பேர் வரையிலானோர் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஆறு பேரும் கொழும்பில் தங்கி இருப்பதற்கு உரிய ஆதாரங்களைக் காட்டவில்லை எனக் குற்றஞ்சாட்டி வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

வெள்ளவத்தைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப் போராளிகள் தங்கிஉள்ளார்கள் என்று கிடைத்த தகவலை அடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக வெள்ளவத்தைப் பொலீஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-8-9)

# பண்டத்தரிப்பு, சில்லாலை, பிரான்பற்று பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம்

## எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் திறந்து வைத்து உரை

சண்டிலிப்பாய், ஏப்ரல் 5

"எமதுபிரதேச சபைப் பிரிவில் இதுவரை மின்சாரம் கிடைக்காத பண்டத்தரிப்பு, சில்லாலை, பிரான்பற்று ஆகிய பகுதிகளுக்கு விரைவில் மின்சார விநியோகம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் திருத்தப்படாதிருக்கும் இப்பகுதியில் உள்ள வீதிகளைத் திருத்துவதற்கும் இவ்வருடத்தில் நிதி ஒதுக்கித் தருவதற்கும் திட்டமிட்டுள்ளோம்."

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று திறந்து வைக்கப்படும் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலம் இப்பகுதி மக்கள்—குறிப்பாக விவசாயிகள் — தங்களுக்குத் தேவையான மண்எண்ணெய் போன்ற எரிபொருள்களை கட்டுப்பாட்டு விலையில் தட்டுப்பாடின்றி இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு வசதி ஏற்பட்டுள்ளது.

கடந்த பத்து வருட காலமாக மூடப்பட்டிருந்த இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை இந்தச் சங்கம் பொறுப்பேற்று நடத்த முன்வந்தது மகிழ்ச்சிக்குரியது. இதற்கு எமது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் டக்ளஸ் தேவானந்தா, வி. கே. குகேந்திரன் ஆகியோர் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு சங்கத்துக்கு இதனைப் பெற்றுத்தந்துள்ளார்கள்.

மேலும் கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது இந்தச் சங்கத்தின் கட்டடங்களுக்கும் சொத்துகளுக்கும் பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதற்கான நஷ்டஈட்டை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுத் தருவதற்கு முயற்சிப்பேன் — என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் உரையாற்றுகையில் எமது மக்கள் நீண்டகாலமாக அனுபவித்துவரும் இன்னல்கள் நீங்கி அமைதியும் சுபீட்சமும் ஏற்பட வேண்டும். இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டும். கடந்த காலங்களில் மக்கள் பலவிதமான இழப்புகளுக்கு ஆளாகி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். மீளக் குடியமர்ந்த மக்களுக்கு எமது பிரதேச சபைகள் மூலம் எம்மாலான பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த நிலையம் மீண்டும் திறக்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம் — என்றார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச முகாமையாளர் ஜே. ஏ. அந்தோனிப்பிள்ளையும் உரை நிகழ்த்தினார்.

சங்கப் பொது முகாமையாளர் சு. வைரவநாதன் நன்றியுரை நிகழ்த்துகையில் இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் இப்பகுதி மக்களின் எரிபொருள் தேவைகளை நிறைவு செய்யும் நிலையமாகச் செயற்படும். எமது சங்கத்துக்கு இந்த நிலையத்தைப் பொறுப்பேற்க உதவிய நாடாளுமன்ற உறுப்பினரும்; ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கே. குகேந்திரன் (ஜெகன்) மற்றும் வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன் ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன் — என்றார். (இ-135)

# 31 சமுர்த்தி வலயங்களுக்கு தலா 3 லட்சம் ரூபா ஒதுக்கீடு

வலி. கிழக்கு, ஏப்ரல் 5

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 31 சமுர்த்தி வலயங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்காகத் தலா மூன்று லட்சம் ரூபா சமுர்த்தி ஆணையாளரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாய அணைக்கட்டுக்கள், கால்வாய்கள், விவசாய மீன்பிடித் தொடர்புடைய சிறு குளங்கள், மீன்பிடித்தளங்கள், பொதுநன்னீர் மீன்பிடித்தளங்கள். பொது விவசாயக் கிணறுகள், சிறு அளவிலான நீர் இறைப்புத் திட்டம், நீர்விநியோகத்திட்டம், பால் சேகரிப்பு நிலையங்கள், கிராமிய வாராந்த சந்தைகள், கிராமிய உற்பத்தி சேகரிப்பு நிலையங்கள், சேமிப்பு மேம்படுத்தத் தேவையான அடிப்படை வசதிகள், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், ஆரம்பப்பாடசாலைகளுக்கான அடிப்படைத் தேவைகள் ஆகிய அபிவிருத்தித் திட்டங்களே இந்த நிதி மூலம் அமுல்படுத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டங்கள் சமுர்த்திச் செயலணிக் குழுக்கள் மூலம் பிரதேச செயலர்கள், அரச அதிபர் ஆகியோரின் அங்கீகாரத்துடன் அமுல்படுத்தப்படும்.

இதற்கான முழு அளவிலான விவரங்களைத் திரட்டும் வேலைகளில் சமுர்த்தி அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (இ-180)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 5

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 4 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(138130 ஏ),(138130 பி), (138512 ஏ), (139551 ஏ), (139610 ஏ), (139610 பி), (139610 சி), (141353 ஏ)

### சாவகச்சேரி

(126113ஏ), (129857 ஏ), (129857 பி), (129857 சி), (129911 ஏ), (129911 பி), (137391 ஏ), (137391 பி), (137465 ஏ), (137513 ஏ), (137513 பி), (137514 ஏ), (137514 பி), (139287 ஏ), (139387 பி), (139287 சி), (139287 டி), (139291ஏ), (139291பி), (139291சி), (139291டி), (139291ஈ), (139291எவ்), (139307ஏ), (139307பி), (139307சி), (139348ஏ), (139348பி), (139353ஏ), (139362ஏ), (139374ஏ), (139374பி), (139374சி), (139374டி), (139384ஏ), (139384பி), (189387ஏ), (139387பி), (139387சி), (139403ஏ), (139410ஏ), (139410பி), (139423ஏ), (139424ஏ), (139424பி), (139429ஏ), (139429பி), (139429சி), [139429பி], [139446ஏ], [141431ஏ], [141446ஏ], [141446பி], [141446சி], [141454ஏ], [141456ஏ], [141456பி], [141468ஏ], [141468பி], [141468சி], [141463டி], [141473ஏ], (141475ஏ), (141483ஏ), (141495ஏ), (141560ஏ), (141560பி), (141560சி), (131466ஏ), (131474ஏ), (131474பி), (131474சி), (131474டி), (131474ஈ), (131499ஏ), (131500ஏ), [131500பி], [131500சி], [139214ஏ], [139214பி], [139214சி], [139216ஏ], [139216பி], [139219ஏ], [139219பி], [139219சி], [139932ஏ], [139932பி], [139937ஏ], [139947ஏ], [139950ஏ], [139950பி], [139950சி], (139950டி), [139950ஈ], [139950எவ்], (139959ஏ], [139959பி], [139968ஏ], (139968பி), (139977ஏ)

### யாழ்ப்பாணம்

(138065ஏ), (140003ஏ),

### கரவெட்டி

(127850ஏ), (129427ஏ), (132450ஏ), (132450பி), (132494ஏ) (132494பி), (132494சி), (135246ஏ), (135247ஏ), (135247பி), (135254ஏ), (137676ஏ), (137676பி), (137737ஏ), (137738ஏ), (137738பி), (137750ஏ), (137797ஏ), (137805ஏ), (137813ஏ), (137845ஏ), (137846ஏ), (137846பி), (137875ஏ), (137884ஏ), (137886ஏ), (137890ஏ), (137894ஏ), (137894பி), (137899ஏ), (137912ஏ), (137912பி), (137914ஏ), (137914பி), (137914சி), (137947ஏ), (137947பி), (137953ஏ), (137960ஏ), (137970ஏ), (137970பி), (137970சி), (137971ஏ), (137994ஏ), (137996ஏ), (137996பி), (138001ஏ), (138001பி), (138002ஏ), (138002பி), (138015ஏ), (138041ஏ), (140006ஏ), (140006பி), (140006சி), (140008ஏ), (140176ஏ), (140176பி), (140176சி), (140188ஏ), (140188பி), (140226ஏ), (140226பி), (140246ஏ).

### மருதங்கேணி

(131928 ஏ), (131928பி), (131929 ஏ), (137921 ஏ),

### நல்லூர்

(138160 ஏ), (138160பி), (139744 ஏ), (139744 பி), (141189 ஏ) (141189 பி), (141189 சி), (141189 டி), (141219 ஏ),

### பளை

(131925ஏ),(131925 பி), (131926 ஏ), (131926 பி), (139481 ஏ), (139481 பி), [139482 ஏ], (139490 ஏ),

### பருத்தித்துறை

[130991 ஏ], [135088ஏ], ]137596 ஏ], ]137596 பி], (137596 சி), (137596 டி), (137648 ஏ), (137648 பி), (137648 சி), (137729 ஏ), (137729 பி), (137729 சி), (137745ஏ), (137745 பி), (137792 ஏ), (137819 ஏ), (137835 ஏ), (137872 ஏ), (137880 ஏ), (137883ஏ), (137883பி), (137910ஏ), (137925ஏ), (137928ஏ), (137935ஏ), (137935பி), (137935சி), (137935டி), (137935ஈ), (137957ஏ), (137977ஏ), (138032ஏ), (140038ஏ),

### சண்டிலிப்பாய்

(130568ஏ), (130568பி), (131791ஏ), (131791பி), (138439ஏ), (139568ஏ), (139773ஏ), (141350ஏ), (141350பி),

### தெல்லிப்பழை

(135504ஏ),

### உடுவில்

(138134ஏ), (139648ஏ), (139648பி), (139648சி), (139648டி), (139668ஏ), (139668பி), (139668சி), (139668டி), (141205ஏ), (141205பி),

(க)

## தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் ஈருருளி வண்டிகளுக்கு பாதுகாப்புச் சேவை

தற்போது துர்க்காபுரம் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்கி வரும் மேற்படி வைத்திய சாலைக்கு வருகை தரும் நோயாளர், பார்வையாளர் ஆகியோரின் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்க (தனிநபர், பொது ஸ்தாபனங்கள்) விருப்பமுள்ளவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கும், விண்ணப்பத்திற்கும் மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 19. 04. 2000
நண்பகல் 12. 00 மணி

நன்றி

சி. சிவமகாராசா — தலைவர்
க. குருமூ — செயலாளர்

மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பழை. (75072)

# உப்பள ஊழியர்களின் சம்பளத்தை வழங்கக்கோரி ஆளுநருக்கு மகஜர்

## தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அனுப்பியது

குருநகர், ஏப்ரல் 5

1997 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை வழங்கப்படாமலுள்ள ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பள ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி வடபிராந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. 1990 இல் மூடப்பட்ட பின்னர் இவைகள் பாதுகாப்புப் படையினரின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இங்கு சேவை புரிந்தவர்களின் சம்பளங்கள் 1996 வரையே வழங்கப்பட்டுள்ளன.

1997 இல் இருந்து இது வரை இவர்களது சம்பளங்கள் வழங்கப்படாததால் இவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையைக் கழிப்பதில் நெருக்கடியைச் சந்தித்து வருகிறார்கள். இவர்களை நம்பியே இவர்களது குடும்பங்கள் வாழ்வதால் அவர்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கி உள்ளனர்.

1999 இல் நடமாடும் சேவையை நடத்தி தாங்கள் யாழ்ப்பாணம் வருகை தந்த போது தமது கொடுப்பனவு தொடர்பான கோரிக்கையை தங்களிடம் தெரிவித்திருந்தனர்.

அவர்களது கஷ்டங்கள் தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் உறுதிமொழி வழங்கியதுடன் மட்டுமல்லாமல்; அவர்களது சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக சம்பளப் பத்திரத்தை யாழ். அரச அதிபருக்கு வழங்குமாறு உத்தரவிட்டிருந்தீர்கள். அப்பத்திரங்கள் அரச அதிபரிடம் வழங்கப்பட்டபோதும் இது வரை இந்த ஊழியர்களின் சம்பளங்கள் வழங்கப்படவில்லை. (ஐ-51)


## தடுப்பு முகாமுக்கு அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 5

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று புதன் கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் கையளிப்பார். (ஐ-10)

## முதலாம் ஆண்டு நினைவுகளில்



மறைவு: 17—04—1999

### அமரர் பொ. சுப்பிரமணியம்

தங்கள் நீங்கா நினைவில் வாழும் தங்கள் குடும்பத்தினர்.

அன்புடன்
மக்கள், உற்றார்.

கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார்கோவிலடி. (74972)

## நீங்காத நினைவுகளில் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்: 06-04-1933
விண்ணுலகில்: 01-04-1999

### திருமதி இராசரெத்தினம் கண்மணி

திதி: பிரதமை 05-04-2000

எம் வாழ்வின் குலவிளக்கே! ஏற்றம் பெறவைத்தவரே!
நம் வாழ்வை எமக்கீந்து தலைமைபெற வைத்தீரே!
அம்பாளை வேண்டுகின்றோம் உம் ஆத்மா சாந்திபெற
அம்மா என அழைக்க யாருமில்லை எமக்கின்று ?

காலத்தால் அழியாது யாம் கொண்ட பாசங்கள்
ஞாலத்தில் இருக்கும்வரை ஞாபகத்தில் மறையாது!
கோலங்கள் கலைந்தபோதும் கொள்கைகள் மாறவில்லை
ஞாலத்தின் திருவுருவே நாம் போற்றும் குலவிளக்கே!

உற்றாரை ஊராரை உடன்பிறந்த சோதரரை
கற்றோரை மற்றோரை கனிவுடனே களித்தவரே!
பற்றாக எமைப்பற்றி பரிவுடனே வளர்த்தீரே!
முற்றாக எமைவிட்டு மூடிவிட்டீர் நின்கதவை !

ஓராண்டு முடிந்தாலும் ஓயவில்லை உம் நினைவு
பாராண்டு முடிந்தாலும் படிந்துநிற்கும் உம்பரிவு
யாராக இருந்தாலும் நயந்துவந்து பேசுமுள்ளம்
வேராக எமைவிட்டு வீழ்ந்துவிட்டீர் என்செய்வோம்?

'ஞான உதயம்',
5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (74982)

## ஆறாம் மாதத்து ஆறாத அஞ்சலிகள்!



### அமரர் வேலாயுதபிள்ளை அருணந்தி

(முன்னாள் செயலர், பிரதேசசபை, சாவகச்சேரி)

தோற்றம்: 12-02-1948
மறைவு: 05-10-1999

மாதங்கள் ஆறாகி விழிகள் வடிக்கின்ற
வேதனைத் தீக்குள்
சுடராகி எங்கள் அப்பா!
சோதனைகள் இப்படியா சொல்லுங்கள்?
பாதகத்துக்கு இப்பலம் பரமன் கொடுப்பதுவோ?
பாதங்கழுவும் விழியாறும் ஆறுமோ?
கண்ணீர் மணிதூவிக் கைகூப்பி நிற்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்,

ஆசிரியர் வீதி,
பெரியரசடி,
சாவகச்சேரி. (75055)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித்திங்கள் 24 ஆம் நாள் (06-04-2000) வியாழக்கிழமை காலை 11-22 மணி முதல் 01-22 மணி வரையுள்ள சுபவேளையில்

திரு. திருமதி ச. இராசலிங்கம் தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன்
**பத்மலிங்கம் (கண்ணன்)**
அவர்களுக்கும்

திரு. திருமதி [illegible] தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி
**பிரேமா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திருமதி ப. இராசலிங்கம்**
"பத்மகிரி" சண்டிலிப்பாய் வடக்கு,
தற்போதைய முகவரி,
கொட்டடி, உடுவில், சுன்னாகம்.

**திரு. திருமதி செ. குருசாமி**
தாவடி வடக்கு, கொக்குவில்.

(இரு வீட்டார் அழைப்பு) (75016)

### இந்தியா சுட்டு வீழ்த்திய விமானம் தொடர்பாக

# பாக். தாக்கல் செய்த மனுவை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்கும்

ஹெய்க், ஏப்ரல்.5

கடந்த ஆண்டு தனது விமானத்தை சுட்டு வீழ்த்தியதற்காக நஷ்ட ஈடு கோரி இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் தாக்கல் செய்த மனுவை சர்வதேச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

கார்கில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாகிஸ்தான் விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தை இந்தியா தனது எல்லைப்பகுதியில் சுட்டு வீழ்த்தியிருந்தது.

இதில் விமானத்தின் விமானிகள் உட்பட அதில் பயணம் செய்த பாகிஸ்தான்விமானப் படையினர் அனைவரும் உயிரிழந்தனர்.

சுடப்பட்ட விமானம் பாகிஸ்தான் எல்லைக்குள்ளேயே பறந்ததாகவும் —

அதனால் இந்திய இராணுவம் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியது. சர்வதேச சட்டங்களை மீறும் செயல் எனவும் —

குற்றஞ்சாட்டி சர்வதேச நீதிமன்றத்தில் பாகிஸ்தான் 6 கோடி டொலர் நஷ்ட ஈடு கோரி இந்தியாவுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்திருந்தது.

பாகிஸ்தானின் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது தொடர்பாக சர்வதேச நீதிமன்றுக்கு இந்தியா தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணையின்கால அளவு மற்றும் விசாரணை வரம்பு ஆகியன குறித்து இந்திய சட்டமா அதிபர்சோலி சொராப்ஜி இந்தியாவின் கண்டனத்தை நீதிமன்றில் தெரிவித்தார். (இ-6-9-5)

# பாகிஸ்தானுடன் இரகசியப் பேச்சுக்கள் ஏதும் இல்லை

## ஜஸ்வந்சிங் தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 5

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க இரகசியப் பேச்சுக்கள் எதனையும் பி.ஜே.பி அரசு நடத்தவில்லை என்று இந்திய வெளிவிகாரத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடன் இரகசியப் பேச்சுக்களை நடத்துவதற்காக பாகிஸ்தான் வெளியுறவுத் துறையின் முன்னாள் செயலர் நியாஸ் நாயக் இந்தியா வந்துள்ளதாக வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் போதே வெளிவிவகாரத் துறை அமைச்சர் இதனைக் கூறினார்.

பயங்கரவாதத்தை ஆதரிப்பதன் மூலம் அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லும் செயல்களுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கி வருகின்றபோது அந்த நாட்டுடன் அர்த்தமுள்ள பேச்சுக்களை எப்படி நடத்த முடியும் என்று அமைச்சர் மேலும் கேள்வி எழுப்பினார்.

# ஜப்பானிய அமைச்சரவை இராஜினாமாச் செய்கிறது

## யஷிரோமோரி புதிய பிரதமர்

ரோக்கியோ, ஏப்ரல், 5

ஜப்பானியப் பிரதமர் ஹெய்சோ ஒபூச்சி கடும் சுகயீனம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து ஜப்பானிய அமைச்சரவை நாளை இராஜினாமாச் செய்யும் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ஒபூச்சி மீண்டும் தனது கடமைகளைப்பொறுப் பேற்கக்கூடிய நிலைமைக்கு ஒருபோதும் திரும்பப்போவதில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்துப் புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு வசதியாக சில தினங்களில் அமைச்சரவை இராஜினாமாச்செய்யும்என்று பதில் பிரதமர் மிக்கியோ அக்கோய் தெரிவித்தார்

புதிய பிரதமர் தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆளும் இடதுசாரி ஜனநாயகக் கட்சியில் ஒபூச்சிக்கு அடுத்த நிலையில் இருக்கும் தலைவரான யஷிரோ மோரி புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் எதிர்வரும் ஜூலையில் பொதுத் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம்—

ஒபூச்சி சுகயீனம் அடைந்ததை அடுத்து ஜப்பானியப் பங்குச்சந்தை திடீரென வீழ்ச்சி கண்டுள்ளது.

# 'குளோனிங்' மூலம் மனிதனை உருவாக்கும் ஆய்வுக்கு அனுமதி?

## பிரிட்டிஷ் பத்திரிகை தகவல்

லண்டன், ஏப்ரல் 5

'குளோனிங்' முறை மூலம் மனிதர்களை உருவாக்கும் ஆராய்ச்சிகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் மீண்டும் அனுமதி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆய்வு மனித சமுதாயத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று சூழலியலாளர்கள் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து ஆய்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஆராய என நியமிக்கப்பட்ட டாக்டர் லியம் டொன்ட்சன் தலைமையிலான குழு ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்று அரசுக்கு சிபாரிசு செய்துள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'டெய்லி கிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மனிதனின் மாற்று உறுப்புகளைப் பெறுவதற்கு வசதியாக இந்த ஆய்வுகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளிக்கும் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (இ-6-ரி)

# பாகிஸ்தான் கவிஞர் இந்தியாவில் தஞ்சம்

## இராணுவ அரசின் அழுத்தம் காரணம்

புதுடில்லி, ஏப்ரல் 5

பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல கவிஞரான அக்தா பகுஜன் ஷக் அங்கிருந்து தப்பியோடி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் எழுதிய 'ஹம்ஜன் நஹிஹோனேத்யேங்கே' அதாவது 'துருப்பிடிக்க அனுமதிக்க மாட்டோம்' என்ற நூலினை பாகிஸ்தானில் வெளியிட்டமைக்காகத் தாம் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களால் துன்புறுத்தப்பட்டதாகவும் —

அதனை அடுத்தே தாம் நாட்டை விட்டுத் தப்பியோடிஇந்தியாவில் தஞ்சமடைந்ததாகவும் — கவிஞர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் பணிப்பின் பேரிலேயே இந்தியப் பிரதமரின் புத்தகத்தை பாகிஸ்தானில் வெளியிட்டதாக வாக்குமூலம் அளிக்கும்படி இராணுவ அரசு தம்மை நிர்ப்பந்தித்து வந்தது என்றும் — அவர் கூறினார்.

இராணுவ அரசின் நெருக்குதல்கள் தீவிரமாகியதை அடுத்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் லாகூரில் இருந்துதான் தப்பி வந்ததாகவும் கவிஞர் அக்தா சொன்னார். (இ-6-9-ரி)

# ஆர்ப்பாட்ட ஊர்வலம் மீது காஷ்மீரில் பொலிஸார் சூடு!

## 7 பேர் பலி; பலர்காயம்

புதுடில்லி, ஏப்ரல் 5

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியோர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில்

**உலக அரங்கில்**

7 பேர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமடைந்தனர்.

கடந்த மாதம் காஷ்மீர் பகுதியில் 40 சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய இராணுவத்தால் 5 இஸ்லாமிய இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் ஐவருக்கும் சீக்கியர்களின் படுகொலைகளுக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று தெரிவித்தே காஷ்மீர் முஸ்லிம்களால் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலக்காரர்கள் பொலீஸார் மீது கற்களை வீசித் தாக்கியதை அடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் 7 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வன்முறைகள் வெடிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

அதேசமயம்— காஷ்மீரில் அமைதி திரும்புவதற்காக ஜம்மு — காஷ்மீர் மக்கள் ஜனநாயக சுதந்திரக் கட்சித் தலைவர் ஷைபத் அலிஷா உட்பட மூன்று இஸ்லாமியத் தலைவர்களை இந்திய அரசு விடுவித்துள்ளது.

### லாலு, ராப்ரி தேவிக்கு எதிராக

# பிணையில் வெளிவர முடியாத கைது உத்தரவு பிறப்பிப்பு

இந்தியாவின் பீஹார் மாநில முதல்வர் ராப்ரிதேவி மற்றும் அவரது கணவரும் ராஷ்ட்டிரிய ஜனதா தளத் தலைவர் லாலுபிரசாத் யாதவ் ஆகியோர் மீது வருமானத்துக்கு அதிமாகசொத்து சேர்த்ததாக நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) அதிகாரிகள் நேற்று இந்த மனுவை நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

லாலுபிரசாத் யாதவ் அறிவித்திருந்த அவரது வருமானத்துக்கு அதிகமாக 40 லட்சம் இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமாகச் சேர்த்ததாக லாலுபிரசாத் மீதும் அதற்கு உடந்தையாக இருந்ததாக ராப்ரிதேவி மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் லாலுபிரசாத்துக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாத கைது உத்தரவை சிறப்பு நீதிமன்றம் வழங்கி உள்ளது.

இதனால் பீஹார் முழுவதும் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் தோன்றி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-6-9-ரி)

# சிம்பாப்வேயில் இனக் கலவரம் ஏற்படலாம் என எச்சரிக்கை!

## எதிர்க்கட்சிக் கூட்டணி விடுத்தது

ஹராறே, ஏப்ரல் .5

சிம்பாபவேயில் உள்நாட்டு இனக் கலவரங்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக எதிர்க்கட்சிக் கூட்டணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிபர் றொபேர்ட் முகாபே அரசின் புதிய நிலவரம்புச் சட்டத்தின் விளைவாக சிறுபான்மை வெள்ளை இனத்தவருக்கும் கறுப்பின மக்களுக்கும் இடையே வன்முறைகள் வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும்—

தற்போதைய நிலைபரத்தை அரசு கவனமாகக் கையாளாது விட்டால் நாடு உள்நாட்டு யுத்தம் ஒன்றைச் சந்திக்க நேரிடும் என்றும்—

சிம்பாப்வேயின் பிரதான எதிர்க்கட்சிக் கூட்டணி மேலும் கூறிஉள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் போராட்டங்களைக் குண்டர்களை வைத்து முகாபே அரசு அடக்குவதையும் எதிர்க்கட்சிக் கூட்டணி கண்டித்துள்ளது.

அதேசமயம்—

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நடைபெறும் ஐரோப்பிய— ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் சிம்பாப்வே விவகாரம் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விஜயம்

புதுடில்லி, ஏப்ரல் 5

அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுத்துறையின் (எவ்.பி.ஐ) பிராந்திய அலுவலகம் ஒன்று இந்தியாவில் திறக்கப்பட உள்ளது. இது தொடர்பான பேச்சுக்களுக்காக அதன் பணிப்பாளர் லூயிஸ் பிறிவ்இந்தியாசென்றுள்ளார்

## நீக்கம்

அமெரிக்கர்கள் லிபிய நாட்டுக்குள் வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அந்த நாடு நீக்கி உள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக லிபியாவுக்கு வரும் அமெரிக்கர்கள் அனைவரும் விசேட அனுமதிபெற்ற பின்னரே நாட்டுக்குள் நுழையமுடியும் தற்போது அந்த நடைமுறை நீக்கப்பட்டுள்ளது (இ-6-9-ரி)

# சங்கக் கடையில் தரமற்ற அரிசி

வலி. கிழக்கு, ஏப்ரல் 5

நல்லூர்ப்பகுதி ப. நோ. கூ. சங்கக் கிளை ஒன்றில் தரமற்ற அரிசி வழங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப்பகுதி கிராம சேவையாளரின் உடனடி நடவடிக்கை காரணமாக இந்தத் தரமற்ற அரிசிக்குப் பதிலாக தற்பொழுது தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

புழுப்பிடித்த நாட்டரிசி, சிவப்பரிசி போன்றவற்றை விற்றதாக அப்பகுதி கிராம சேவையாளரிடம் பொதுமக்கள் தெரிவித்தனர்.

உடனடியாக நல்லூரில் உள்ள ஏனைய கிளைச் சங்கங்களுக்கு விரைந்த அவர் அவற்றில் தரமான அரிசி விற்கப்படுவதைக் கண்டார்.

இதனை அடுத்து குறிப்பிட்ட சங்கக் கிளைக்கும் தரமான அரிசி வழங்க நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

[இ-8-180]

# சட்டவிரோதமாகக் கள் விற்போர் மீது நடவடிக்கை

நெல்லியடி, ஏப்ரல் 5

பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க எல்லைக்குள் சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்வோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்படி சங்கத் தலைவர் வி. ஸ்ரீஇராமச்சந்திரா, பொது முகாமையாளர், கே. இராசலிங்கம் ஆகியோர் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; எமது சங்கத்தின் கீழ் இயங்கும் கள்ளுத் தவறணைகள் தற்பொழுது சீராக இயங்கிவருவதனால் சீவல் தொழிலாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் கள்ளினை அவ்வப் பகுதியில் உள்ள தவறணைகளுக்கு வழங்கி நமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் — என்றனர்.

(இ-109)

# சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ். பிறவுண் வீதி, நரியன் குண்டு ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலய மஹா கும்பாபிஷேக தின விழா எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும்.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு எம்பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

(க-6)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல். 5

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மணவாளக் கோலத் திருவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் சங்காபிஷேகம், விசேட பூசை, ஆராதனை என்பவற்றுடன் நடைபெறும்.

(க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

கரணவாய் வடக்கு எள்ளன்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் (நாச்சிமார்) ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இவ் உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 16 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 7 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-15)

★ ★ ★

மானிப்பாய், ஏப்ரல் 5

ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தில் கிராம பிரதஷின மகா கும்பாபிஷேக தின மணவாளக் கோல சங்காபிஷேகமும் திருக்குளிர்த்தி வைபவமும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளன.

அன்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(க-90)

★ ★ ★

கைதடி, ஏப்ரல் 5

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆந் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-74)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

தாவடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் உற்சவ காலத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-139)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜா வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இன்று முதல் தேர்த்திருவிழா வரையான உற்சவ காலத்தில் செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

[க-10]

★ ★ ★

மானிப்பாய், ஏப்ரல் 5

மானிப்பாய் சோதி வேம்படி ஸ்ரீ காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வசந்த நவராத்திரி விழா இன்று புதன் கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும்.

[க-90]

★ ★ ★

மானிப்பாய், ஏப்ரல் 5

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் பிற்பகல் 3 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

[க-90]

# வடமராட்சிகிழக்கில் கி.சேவையாளர் மரண விசாரணை நடத்த அனுமதி

நெல்லியடி, ஏப்ரல் 5

வடமராட்சி கிழக்கில் அனர்த்தங்களின் போது மரணமடைபவர்களின் மரண விசாரணைகளை இனிமேல் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் நடத்துவதற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் அனுமதி அளித்துள்ளார்.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாததால் இறந்தவர்களின் சடலங்களை உரிய நேரத்தில் அடக்கம் செய்ய முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை அறிந்த பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ் ஏ.ஈ ஏகநாதன் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவை அலுவலர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றுக்கு அழைத்து இந்த அனுமதியைக் கிராம சேவை அலுவலர்களுக்கு வழங்கினார்.

(இ-109)

# காச நோயாளருக்கு சமூகத்தின் அரவணைப்பும் அவசியமானது

## மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

தென்மராட்சி, ஏப்ரல் 5

நோயாளர்களுக்கு மருந்துகளுடன் சமூகத்தின் அரவணைப்பும் அவசியமாகும். இது விரைவில் அவர்களைச் சுகதேகி ஆக்கிவிடும். காசநோய் குணமடையக் கூடிய நோயானதால் இந்த நோயைக் கண்டு எவரும் அச்சம் அடையத் தேவை இல்லை. ஒய்வாக இருந்து இரண்டு மாதங்கள் சிகிச்சை பெற்றால் காசநோய் குணமாகிவிடும். நீண்ட நாள்கள் சிகிச்சை பெறுபவர்கள் குணமடைந்து வீடு செல்லும்வரை பொழுது போக்கு வசதியின்றி இருந்து வந்தகுறை சாவகச்சேரி வணிகர் மன்றத்தினால் நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி ஆஸ்பத்திரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யமுனானந்தா தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி உலக காசநோய் தினத்தையொட்டி நடந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது —:

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நோயாளர்களை அரவணைத்து இன்றைய தினத்தில் அவர்களுக்குப் புடைவைகள் வழங்கி காச நோயாளர்கள் மக்களால் அரவணைக்கப்பட வேண்டியவர்கள் என்பதைக் காட்டியுள்ளனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இயங்கும் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுக்கு சாவகச்சேரி வணிகர் மன்றத்தினர் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் சிகிச்சை பெறும் 31 நோயாளர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் உடுபுடைவைகளையும் வழங்கினர். இதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

வணிகர் மன்றத் தலைவர் கு. குமரகுரு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், லயன் பொ. செல்லையா உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்

(இ-117)

# அடிதடிக்கு இலக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

சகோதரனுக்கும் மற்றவர்களுக்குமிடையில் இடம்பெற்ற தகராறை விலக்கி வைக்கச் சென்ற பெண் ஒருவர் தாக்குதலுக்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணேசலிங்கம் விஜயலட்சுமி (வயது 45) என்பவரே தாக்குதலுக்கிலக்கானவராவார்.

(க-15)

# மரக்கறிப் பயிர்ச் செய்கையில் நாட்டம்

மரக்கறிகளின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பிரதேச விவசாயிகள் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் அதிக நாட்டம் காட்டி வருகின்றனர்.

பாகல், புடோல், பூசனி, பயிற்றை, வெண்டி, கத்தரி போன்ற மரக்கறிப்பயிர்களை அவர்கள் நடுகை செய்து வருகின்றனர்.

(க - 133)

# மரண அறிவித்தல்கள்

## சின்னக்குட்டி சுந்தரலிங்கம்

(முன்னாள் உத்தியோகத்தர் சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தைப் புகுந்த இடமாகவும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமான சி. சுந்தரலிங்கம் 03-04-2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி-இளையபிள்ளை தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ருக்குமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திராவின் (தேவி) அன்புக் கணவரும் கிரிசாந்தி, பிரசாந்தி (பிரான்ஸ்), மதன், றொசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகம்மா, முத்தம்மா, பரமலிங்கம், கனகம்மா, செல்லம்மா, பாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகநாதன், ரகுநாதன், சோதிநாதன் (நியூசிலாந்து), யோகநாதன் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயரட்ணம் (கனடா), தர்மநாயகம் (லங்கா சிமெந்து நிறுவனம்), கனகநாயகம் (கிராம அலுவலர் வலி. வடக்கு), சிறீகந்தநாயகம் (மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05-04-2000) புதன்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. தர்மநாயகம்
மருமகன்

இல. 11 பொற்பதி லேன்,
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு.

(75096)

## திருமதி கனகம்மா பொன்னம்பலம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா பொன்னம்பலம் நேற்றுக் காலை [04-04-2000] 8. 00 மணிக்கு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தவைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும் மகேஸ்வரி அரியரத்தினம். புவனேஸ்வரி நவரத்தினராசா (இந்தியா), Dr. ஆறுமுகராசா (லண்டன்), Dr பொ. இராமநாதன், (சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), ஈஸ்வரி சத்தியமூர்த்தி, (இந்தியா), Dr. விவேகானந்தன், (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயாரும் அரியரத்தினம், நவரத்தினராசா (இந்தியா), சத்தியலீலா (லண்டன்), கலைவாணி இராமநாதன் (இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்), சத்தியமூர்த்தி (கொழும்பு), Dr. பவானி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுசி, Dr. பாலசுப்பிரமணியம் (ஜிந்துப்பிட்டி அரசினர் வைத்தியசாலை கொழும்பு), Dr சுரேஸ், கல்யாணி (கொழும்பு), Dr. கவில், Dr. கவிதா, Dr. பார்த்திபன், பரந்தாமன், பிரகலாதன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), அஜித், (தொழில்நுட்பக்கல்லூரி, சென்னை), சுதன், சத்தியாயினி, மாதங்கி, (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருத்திகா, வர்மன், (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-04-00) புதன்கிழமை காலை 10. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 11. 00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. பொ. இராமநாதன்
(பேபி)

தாவடிச்சந்தி,
கொக்குவில்.

(75097)

உதயன்.

## கேவலமான தாக்குதல்

மட்டக்களப்பைச் சேர்ந்த மூத்த செய்தியாளர் ஐ. நடேசனின் இல்லத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.30மணிக்கு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

மட்டக்களப்பு நகரில் வாவிக்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்துக்குள் நள்ளிரவு வேளை புகுந்த கும்பல் ஒன்று இந்தக் கேவலமான செயலைச் செய்திருக்கிறது.

படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இத்தகையதாக்குதலை நடத்திவிட்டு சூத்திரதாரிகள் பாதுகாப்பாகத் தப்பிச் சென்றிருக்கின்றார்கள்.

அவரது வீட்டில் இருந்து கிழக்காக நூறு யாருக்கு அப்பால் கோவிந்தன் வீதி இராணுவ முகாம் சோதனைச் சாவடியும், மேற்காக ஐம்பது யாருக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதாராஜப்பெருமாள் அணியின் இயக்க அலுவலகமும் காப்பரணும் உள்ளன.

நள்ளிரவு வேளையில் இந்தச் சோதனைத் தடை நிலையங்களைத் தாண்டி வந்து தான் தாக்குதல்காரர்கள் தமது கைவரிசையைக் காட்டியதோடு அங்கிருந்து தப்பியும் சென்றிருக்கின்றார்கள்.

யுத்த சூழ்நிலையில் — மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் — மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதில் துணிச்சலோடும் நேர்மையாகவும் செயற்படும் பத்திரிகையாளர்களை — மிரட்டி அவர்களது வாயை-பேனாவை-கட்டிப்போடும் முயற்சியாகவே இத்தாக்குதல் அமைந்துள்ளது.

ஆனால் குண்டுத் தாக்குதல்களை நடத்தி செய்தியாளர்களை அடிபணிய வைக்க முடியாது என்பதனை சம்பந்தப்பட்டோர் உணர மறுத்தது, மறந்தது துரதிர்ஷ்டமே.

அரசப் படைகளோடு கைகோர்த்து நிற்கும் ஒரு குழுவே, அவர்களின் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் பற்றிய விவகாரங்களைத் துணிச்சலோடு அம்பலப்படுத்தியதற்காக நடேசனின் இல்லத்தின் மீது தாக்குதலை நடத்தியதாகப் பொதுவாகப் பேசப்படுகின்றது.

மனித உரிமைகள் பேணும் விடயங்களில் இலங்கை அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று கோரி அவசர — கடுமையான வார்த்தைகள் அடங்கிய — கடிதம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு சில தினங்களுக்கு முன் அனுப்பி வைத்த ஐரோப்பிய ஒன்றியம், அக் கடிதத்தில் கூட செய்தி ஊடகங்கள் மீதும் செய்தியாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெளிவான நிலைப்பாடு ஏதுமின்றி. திடீர் திடீரென முளைக்கும் செய்தி ஊடகங்கள் மற்றும் செய்தியாளர்கள், ஆயுதம் தாங்கிய குழுக்களின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்களுக்கு இலகுவாக அடிபணிந்து — தாம் நுழைந்த துறைக்கு இழுக்குத் தேடும் வகையில் — முகஸ்துதி பாடிக்கொண்டிருப்பதையும் ஒரு புறத்தில் மறப்பதற்கு இல்லை. அத்தகைய செயற்பாட்டினால் ஊடகவியலாளரை மிரட்டும் சக்திகளுக்கு அச்செயலில் ஈடுபடுவதற்கு ஊக்கமளிப்பதாகவே அமையும்,

இத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது; அதனை மேற்கொண்ட சக்திகளும் அவற்றுக்குத் துணைபோகும் அமைப்புகளும் நபர்களும் எவை, யார் என்பது சரியான விசாரணை மூலம் இனங்காணப்படுவது அவசியம்.

# மகனின் சடலத்துடன் இரவு வேளை காட்டில் தனித்து இருந்த தாயார்!

## யுத்தப் பிரதேசத்தில் அரங்கேறிய "மயான காண்டம்"

அரிச்சந்திர மயான காண்டத்தில் சந்திரமதி, தன் மகன் தேவதாஸனின் சடலத்தை சுடலையில் இருந்து காவல் காத்ததை நாம் புராண இதிகாசங்களிலும் நாடகங்களிலும் பார்த்திருக்கின்றோம். அதே போன்று விதவைத் தாயார் ஒருவர், ஷெல் வீச்சில் இறந்த தனது மகனின் சடலத்தை நடுக்காட்டில் வைத்திருந்து இரவு முழுவதும் காவலிருந்த மனதை உருக்கும் சம்பவம் அண்மையில் பளையிலுள்ள செட்டியாகாடு என்ற இடத்தில் நிகழ்ந்துள்ளது.

தற்பொழுது நடைபெற்று வரும் அனர்த்தங்களினால் பெரிய பளை, பளையிலிருந்து இடம் பெயர்ந்து, தனது பிள்ளைகளுடன் வடமராட்சி நோக்கி வந்து கொண்டிருந்த சந்திரகுமார் — விஜயராணி (வயது 40) என்பவரே இந்தப் பயங்கரத்தைச் சந்தித்த தாயார் ஆவார்.

ஷெல் வீச்சின் போது, உடலில் சிறு காயமடைந்தவரான அந்த விதவைத் தாயார் நேற்றுக்காலை மந்திகை மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்த சமயம், எமது செய்தியாளருக்கு பேட்டி அளித்தார்.

தமது 13 வயது மகனைப் பறிகொடுத்த நிலையில், மிகவும் ஏக்கத்துடன் சோகமே உருவாகக், காணப்பட்ட அவர் தெரிவித்ததாவது:

பல வருடங்களுக்கு முன்னர் நான் எனது கணவர், பிள்ளைகளுடன் நெல்லியடிப் பகுதியில் வசித்து வந்தேன். 1989 ஜூலை 27 ஆம் திகதி கடைக்குச் சென்ற எனது கணவனை, நெல்லியடிப் பகுதியில் வைத்து இந்திய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றார்கள்.

இதனையடுத்து, எனது கைக் குழந்தையுடன், நான் பளையிலுள்ள பெரிய பளை என்ற இடத்தில், வசித்து வந்தேன். எமது குடும்ப சீவியத்தைக் கவனிப்பதற்காக அங்கு தோட்டம் ஒன்றில் கூலியாளாக வேலை செய்து வந்தேன்.

வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற அனர்த்தங்களையடுத்து, நாம் இடம்பெயரும் அபாய நிலை உருவாகியது.

இதனால் நான் வேலை செய்யும் தோட்டக் கணக்காளருடனும் மற்றும் எட்டுப் பேருடனும் சேர்ந்து கடந்த 26 ஆம் திகதி காலை வீட்டிலிருந்து புறப்பட்டோம்

நாலாபுறமும் ஷெல் வீச்சுச் சத்தங்கள் காதைப் பிளக்க பயந்து பயந்து வடமராட்சிக்குச் செல்வதற்காகப் போய்க் கொண்டிருந்தோம். காட்டு வழியின் ஊடாகவே செல்ல வேண்டியிருந்தது.

எனக்கு முன்னால் என்னுடன் வந்தவர்கள் நடந்து செல்ல நானும் இறந்த மகன் ரமேஷ்குமாரும் கடைசியில் நடந்து சென்றோம்.

அப்போது நேரம் 11 மணியிருக்கும். திடீரென காட்டின் மத்தியில் பெரும் இரைச்சலுடன் ஷெல் வந்து வீழ்ந்தது. மகன் அதில் அகப்பட்டு ''ஐயோ அம்மா என்னைக் காப்பாற்றுங்கோ காப்பாற்றுங்கோ'' என்று கூச்சலிட்டார். அவரின் உயிர் மறுகணம் பிரிந்தது கூட வந்தவர்களை நிற்குமாறு கெஞ்சினேன். அவர்கள் மறுத்து விட்டனர்.

இதனால் என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. எமக்கு முன்னால் சென்றவர்களுள் ஒருவரான சவுந்தரராஜா என்பவர் மட்டும் திரும்பி வந்தார். தண்ணீர் கேட்டேன். அருகிலுள்ள காளி கோயிலில் அள்ளி வந்து தந்துவிட்டு மகனின் சடலத்தை வைப்பதற்கு சாரம் ஒன்றையும் தந்து விட்டுப் போனார்.

அவ்வேளை அப்பகுதியால் ஒருவரும் வரவில்லை. நேரமும் மாலையாகி இருளாகியது. காட்டில் பன்றிகள் சத்தம் போடுவது எனக்குக் கேட்டது. இதனால் உக்கிய காவோலைகளை எடுத்து வந்து சடலத்துக்கு மேல் போட்டு மறைத்து விட்டு இரவோடு இரவாக காவலிருந்தேன்.

அரிச்சந்திர நாடகத்தில் சந்திரமதி தன் மகன் தேவதாசனின் சடலத்தை சுடலையில் வைத்து காவலிருந்தது போல் கணவனை இழந்த நான் எனது மகனின் சடலத்தை காட்டில் வைத்து காவலிருக்கும் நிலைமை ஏற்பட்டது.

மறுநாள் ஒரு மைல் தூரம் நடந்து சென்று ''புலிவளைஞ்சான் தோட்டம்'' என்ற இடத்திலிருந்து சிலரைக் கூட்டி வந்தேன். காட்டில் கிடந்த மகனின் சடலத்தைத் தூக்கி வந்து அந்த தோட்ட வளவிலேயே அடக்கம் செய்தேன்.

என்னையும் இறந்த மகனையும் புலோப்பளை ஆரோக்கியமாதா கோயில் அடிகளார் தேடிப்பார்த்ததாகவும் பின்னர் அறிந்து கொண்டேன்

இந்த நிலையில் அப்பகுதியிலுள்ள சுமார் 75 மக்களுடன் சேர்ந்து அல்லிப்பளை, கிளாலி, விடத்தற்பளை ஊடாக வடமராட்சியை வந்தடைந்தேன் — என்றார்.

(இ-109)

## புளொட் அமைப்பு கண்டனம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 4

மட்டக்களப்பைச் சேர்ந்த மூத்த செய்தியாளர் ஐ. நடேசனின் இல்லத்தின்மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை மட்டக்களப்பு—அம்பாறைப் பிராந்திய புளொட் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடேசன் நீண்ட காலமாகப் பத்திரிகைத்துறையில் உள்ளவர். அதுமட்டுமல்லாமல் சிறந்த மக்கள் சேவையாளரும்கூட. மிகவும் இக்கட்டான இந்தக் காலகட்டத்திலும் பல சக்திகளின் அழுத்தத்தின் மத்தியிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் உண்மை நிலைமைகளை வெளிக்கொண்டு வருவதில் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு வருபவர்.

அவருக்கு எதிரான இந்த நடவடிக்கையைச் சுதந்திரமான கருத்துக்களை வெளியிடுவதற்கு விடுக்கப்பட்ட சவாலாகவே நாம் கருதுகின்றோம். இத்தகைய நடவடிக்கைகளை யார் மேற்கொண்டாலும் புளொட் அமைப்பினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் தொடராது இருக்கவேண்டும் சுதந்திரமான கருத்து வெளியிடுவோருக்கு ஒத்துழைப்பு வழங்க அனைத்துச் சக்திகளும் முன்வரவேண்டும்.

இப்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[இ-8]

## புலிகள் தரப்பில் உயிரிழந்த மேலும் ஐவர் பற்றிய விவரம்

வவுனியா, ஏப்ரல் 5

தொடரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையினால் மேலும் ஐந்து பேர் தமது தரப்பில் உயிரிழந்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ நிலானி [விவேகானந்தம் சந்திரகுமாரி - கிளிநொச்சி]

★ தமிழ்மரசு [பன்னீர்ச் செல்வம் கவிதா - யாழ்ப்பாணம்]

★ கப்டன் அன்புமணி கனகரத்தினம் சத்தியஸ்ரீ - யாழ்ப்பாணம்]

★ அமுதன் [சின்னக்கறுப்பன் செல்வகுமார் - (கிளிநொச்சி]

★ கடற்புலி எல்லைப்படை வீரர் 2 ஆம் லெப். பெரிய தம்பி [ஜோசப் ஞானரூபன்- யாழ்ப்பாணம்]

### நாளை

பங்குனி 24

வியாழக்கிழமை

திதி: துதியை

முன்னிரவு 9 35 வரை

நட்சத்திரம்: அச்சுவினி

பிற்பகல் 2.36 வரை.

செல்லப்பா சுவாமிகள்

குருபூசை

சுபநேரம்: 7.38 – 9 08

ராகுகாலம்: 1 38 3 08

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உழைப்பின்றி உண்பவர்களைத் திருடர்கள் என்று நான் கூற வேண்டும்.

- காந்தியடிகள்

## பெறுபேறுகளை அதிகரிக்க நடவடிக்கை

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் இந்த வருட இறுதியில் ஜி. சீ. ஈ சாதாரண தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு கணிதம் ஆங்கிலம் ஆகியபாடங்களுக்கு விசேட வகுப்புக்கள், முன்னோடிப்பரீட்சைகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் 'சீடா' திட்டம் அத்தகைய செயல் திட்டங்களை மேற்கொண்ட போதும் இந்தவருடம் இத்திட்டம் நிறுத்தப்பட்டமையினாலேயே வலயக் கல்வி அலுவலகம் மேற்படி இரண்டு பாடங்களிலும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிக்கும்நோக்குடன் புதிய திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர உள்ளது.

(க--133)

## விசுவமடுவில் தீப்பந்த ஊர்வலம்

விசுவமடு போர் எழுச்சிக் குழுவின் ஏற்பாட்டில் விசுவமடு றெட்பானா வலயத்தில் மாபெரும் தீப்பந்த எழுச்சி ஊர்வலம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குமாரசாமி புரத்தில் ஆரம்பமாகி இடம்பெற்ற இந்த தீப்பந்த ஊர்வலத்தில் கிராம போர் எழுச்சிக் குழு, வலய போர் எழுச்சிக் குழு ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தோர் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

தொடரும் ஓயாத அலைகள் - 3 யுத்தத்தில் புலிகளின் வெற்றியைக் கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஊர்வலத்தின் நிறைவில் எழுச்சிக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(இ-8)

## தவக்காலச் சிந்தனை

(இருபத்தொன்பதாம் நாள்)

யேசு வாழ்ந்த சூழலிலே எந்தஒருமனிதனும் தன்னைக் கடவுளுக்கு இணையாக்குவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படிக்கூறியவர்களைக் கொலை செய்யவும் தயங்கமாட்டார்கள் 'தந்தை தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பது போல் மகனும் வாழ்வின் ஊற்றாய் இருக்குமாறு செய்துள்ளார். தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் தந்தை அவருக்கு அளித்துள்ளார்'. (யோ. 5:26,27) என யேசு கூறியபொழுது யேசுவுக்கு மரண தண்டனை அளித்தது அன்றைய யூத சமூகம். இது இறைவனின் தீர்ப்பு யூதாஸ் முத்தம் கொடுத்ததால் ஏற்பட்ட தீர்ப்பு அல்ல. ''செய்வதை சீக்கிரம் செய்து முடி'' என்று கூறி ஏற்றுக்கொண்ட தீர்ப்பு. நமது குடும்ப குழுமத்திலும், சமுதாயத்திலும் நாம் இன்று பல்வேறு விதமான தீர்ப்புக்களை வழங்குகின்றோம். நீதி, நேர்மை, உண்மை அறியாது எமது பிழையான தீர்ப்புக்களால் எத்தனை நல்ல உள்ளங்களை வேதனைப்படுத்துகின்றோம். எமது பட்டம், பதவி, பறிபோய்விடும் என அஞ்சி அந்தச் செயல்களுக்கு ''ஆமா'' போட்டு மனசாட்சியைமழுங்கடித்து வருகின்றோம். அலுவலகங்களின்ஊழியர் உரிமையாளர் மனம்திறந்து தங்கள் பிரச்சினைகளைக் கதைக்காததால் மேலும் பிரச்சினைகள் கூடிக்கொண்டு போகின்றன. நமது தவறான தீர்ப்புக்களைத் திருத்தஇத்தவக்காலம் உதவட்டும். ''எதை விதைத்தோமோ அதையே அறுப்போம்''.

சூ. மரியநாயகம்

(யாழ்ப்பாணம்).

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இல. 10 வேம்படி வீதியைச் சேர்ந்தவரின் கொழும்புப் பயணச்சீட்டுகள் 04 03-04-2000 திங்கட்கிழமை அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(75079)

### இறைச்சிக்கோழி

Broilers, Cullbirds இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறு சுறுப்பான சேவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர்.

(75082)

### மணமக்கள் தேவை

1973 ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றமுள்ள லண்டனிலிருந்து வந்து நிற்பவருக்கும் பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் உள்ள மணமகன்களுக்கும் அழகிய பெண்கள் தேவை. உள்நாட்டில் பணிபுரியும் மணமகன்களுக்கும் உள்நாட்டு உத்தியோக மணமகன்கள் தேவை. தொடர்பு: அபிராமி திருமணசேவை பரந்தாமன் — ராசாத்தி, ஆடியபாதம் சந்தை வீதி, முதலாம் ஒழுங்கை, கொக்குவில்.

(75045)

### தவறிவிட்டது

சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த பொன்னுத்துரை தயாளன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல. 0905010142) ஆனைக்கோட்டைக்கும் குருநகருக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

(75087)

### உடன் தேவை

நன்கு பராமரிக்கப்பட்ட, உடனடியாகப்பாவிக்கக்கூடிய நிலையில் உள்ள போட்டோ பிரதி இயந்திரம் தேவை. விலை. விவரங்களுடன் தொடர்புகொள்ளவும், தொ.பேசி. இல 021-3220. இல. 021-343.

(75067)

### உதவியாளர் தேவை

ஒரு கால் ஊனமுற்ற தாயைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் உடன் தேவை. தகுதியுடையவர் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: S.S நாயகம், சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.

(75080)

## மீன்பிடி உபகரணங்களை மீட்க முயற்சி

வடமராட்சி கிழக்கிலிருந்து அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்துள்ள கடற்றொழிலாளிகளின் மீன்பிடி உபகரணங்களை மீட்டு அவர்களிடம் ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளை மருதங்கேணி பிரதேச செயலர் வி. பி. வேலாயுதபிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளின் வேண்டுகோளையடுத்து இது குறித்து மருதங்கேணி பிரதேச செயலர் இராணுவ உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். [இ-109]

## புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு பல கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கேற்ப ஏற்கனவே 'தொடர்பாடலுக்கான ஆங்கிலம்' என்ற கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 'உயர்தர ஆங்கிலம்' என்ற கற்கை நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

மேலும் 'பெண்களும் அபிவிருத்தியும்' 'வானியலும் சோதிடக் கலையும்' 'கூட்டுறவு இயக்கம்' 'சமூகப் பணியும் — சமூக நலனும்' 'முதலுதவி', 'போக்குவரத்து நெறிமுறைகள்' போன்ற அடிப்படைக் கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

மேற்படி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தோரின் எண்ணிக்கைக்கு ஏற்ப கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் எனவும், கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் புறநிலைப் படிப்புகள் அலகின் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அதன் இணைப்பாளர் மேலும் கூறினார். (இ-8)

## இடமாற்றம்

யாழ்.செயலகத்தில் உள்ள ஆட்பதிவு அலுவலகம் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் மேல்மாடிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-10]

## சேதம்

முகமாலை தேவாலயத்தின் பின்பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் தேவாலய கட்டடத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது.

கடந்த சனிக்கிழமை இரவு ஷெல் வீழ்ந்ததால் தேவாலயத்தில் தங்கியிருந்த மக்கள் கால்நடையாக கடந்த ஞாயிறு மாலை மிருசுவில் வந்து சேர்ந்தனர். (இ-111)

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

### உப அதிபர்

# சேவைநலன் பாராட்டு

### (1976 — 2000)



## திருமதி நாகபூசணிஅம்மா திலகநாதன்

B. Sc.

[ஓய்வுபெற்ற உப அதிபர் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)]

சேவைப் பாதையில்.........

★ பகுதி நேர விரிவுரையாளர் - கொழும்பு பல்கலைக்கழகம், யாழ். தொழில் நுட்பக்கல்லூரி

★ பகுதிநேர ஆசிரியர் - யா/ வேம்படி மகளிர் கல்லூரி, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

★ ஆசிரியர் - கொ/ களுத்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம் (1972 – 1975),
- யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி (1976-07-23 – 1988-06-01)

★ பகுதித்தலைவர் - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி (1988-06-02 – 1996-03-22)

★ மேலதிக அதிபர் - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி (1996-03-23 – 1997-09-22)

★ உப அதிபர் - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி (1997-09-23–ஜனவரி 2000 வரை)

கொழும்பு சைவ மங்கையர் கழகம், யாழ். இராமநாதன் கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி போன்ற கல்லூரிகளின் பழைய மாணவியும், எமது கல்லூரியில் கடந்த கால்நூற்றாண்டு காலமாக ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், மேலதிக அதிபராகவும், உப அதிபராகவும் கடமையாற்றி எம் மாணவச் செல்வங்களுக்கு அறிவூட்டி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி நாகபூசணிஅம்மா திலகநாதன் (உப அதிபர்) அவர்களின் ஓய்வுகாலம் சீரோடும் சிறப்போடும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி.

விளம்பர உதவி:

**இராசம் ரேடிங்கோ**
135, கண்டி வீதி,
சாவகச்சேரி.

**இராசம் தொலைத்தொடர்பு நிலையம்**
கைதடி.
தொலைபேசி இல.
021 – 3047 021 – 3048

(சி/11643)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 14 — 05 — 1935

விண்ணில்: 18 — 03 — 1999

## திருமதி கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்

திதி:- 05 - 04 - 2000

குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊருக்கு உத்தமியாய்
உறவினர்களுக்கு உறுதுணையாய் இருந்து
விண்ணுலகை நீயடைந்து
ஓராண்டு சென்றதம்மா!
எம் நினைவுத் துளிகள் உன்
பாதச் சுவடுகளை நினைந்து உருகுதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய கருப்பையடி அம்மனையும் பெரிய தம்பிரானையும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
**அன்புக் கணவன், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

வலவன் தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(75092)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 1918 — 02 — 29

இறைவன் அடியில்: 1998 — 03 — 28

## அமரர் நாகராசா சோமசுந்தரம்

அன்பையும், பண்பையும் ஊட்டி எமக்கெல்லாம் ஆதரவாய் இருந்து; பண்புடன் எமை வாழவைத்து பாதியில் சென்றதும் ஏனோ!

உங்கள் ஆத்மா நற்சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சரவணை கிழக்கு,
வேலணை.

(75100)

# நமது உயர்கல்வி நிறுவனங்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5
யாழ்ப்பாணத்தில் உள்ள உயர்கல்வி நிலையங்களின் பயன்பாட்டையும் அவற்றில் கல்விகற்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதன் மூலம் எமது கல்வி வளத்தை உயர்த்த முடியும்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் குறிப்பிடத்தக்க ஒருசில கல்வி நிறுவனங்களே உள்ளன. இருப்பினும் எமது மாணவர்கள் ஒரே நேரத்தில் பல பட்டங்களை பெறுவதற்கு முயல்கின்றனர்: இதனால் பலரது சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றன. எமது உயர்கல்வி நிலையங்களை வளர்ப்பதற்காக அதிகாரங்கள் நிறையப் பெற்ற தென்னிலங்கை அதிகாரிகளுக்கு நாம்தான் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதற்காக தனியொருவரது அழுத்தங்களால் பலனேதும் ஏற்படப்போவதில்லை.

எமது மண்ணில் எத்தனையோ கல்விமான்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் இணைந்து ஒன்றிணைந்த கல்விச் சமூகமாக நின்று எமது கோரிக்கைகளை நாம் முன்வைக்க வேண்டும். இல்லையேல் வருங்கால சமுதாயம் எம்மையே குறை சொல்லும்.

பல்கலைக்கழக மாணவர் பலர் பல்கலை அனுமதி கிடைக்காதவர்களுக்கு உயர்கல்வி பெறக்கிடைத்த சந்தர்ப்பங்களையும் வேலை வாய்ப்புக்களையும் தட்டிச் சென்ற சம்பவங்கள் பல நடந்துள்ளன. இது விரும்பத்தக்க ஒன்றல்ல —என்று அவர் தெரிவித்தார். (ஐ-4)

## ஆசிரியர்கள் இன்று வேலை நிறுத்தம்

திருகோணமலை, ஏப்ரல் 5
வடக்கு – கிழக்கு மாகாண பொது ஆசிரியர் சங்கம் உட்பட 5 சங்கங்கள் திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை திருகோணமலையில் ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

மேற்படி சங்கம் கடந்த மாத இறுதியில் 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்தியதும் —

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்ததும்—

தெரிந்ததே. (ஐ-7-150)

## விஞ்ஞான சங்க அமர்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5
யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 8 ஆவது வருடாந்த நிகழ்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த அமர்வுகளின்போது நான்கு பிரிவுகளாக ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் சமாந்தரமாக நடைபெறும்

பல்கலைக்கழக நூலக அரங்கில் பேராசிரியர் திருமதி ஆர். மகேஸ்வரன், கலாநிதி ஏ. நவரத்தினராஜா தலைமையிலும், பௌதிக விரிவுரை மண்டபங்களில் முறையே பேராசிரியர் செல்வி வி. அரசரத்தினம், பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் தலைமையிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும்.

பிற்பகல் 2.45 மணிக்கு பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் 'சமூக மருத்துவத்தில் திட்டவடிவில் மாணவர்களின் ஆராய்ச்சி' என்பது குறித்து உரையாற்றுவார். இதனைத் தொடர்ந்து வி. பி. சிவநாதன் 'யாழ் மாவட்ட உற்பத்தித் துறைகளும் வேலை வாய்ப்பும்' என்பது குறித்து உரை நிகழ்த்துவார்.

(ஐ-4-ரி-86)

## 2ஆம் ஆண்டுநினைவுத்துளிர்



அன்னை மடியில்
01 — 04 — 1979

மண்ணின் மடியில்
28 — 03 — 1998

### சிவனேசன் நிசாந்தன்

திதி: பிரதமை 5-4-2000 புதன்கிழமை

அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிவிளக்கே, நிசாந்தன் உமது அப்பா, அம்மா, சகோதரர்களை கண்ணீரில் ஆழவிட்டு கணப்பொழுதில் மறைந்ததென்ன? உமது பூ முகத்தை இனி எப்போது நாம் காண்போம்? நீர் நடந்த பாதையெல்லாம் புல் முளைத்தது. உமது இல்லம் சோகமயமாகியுள்ளது. ஒரு முறை வரமாட்டீரோ எங்களிடம்? ஆண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம் மாநிலத்தே. நீர் வரமாட்டீர்; நாம் என்றும் உம்மை மறவோம்!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் வாடும்
**அன்பு அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, அப்பப்பா, அன்ரிமார் மற்றும் சித்திமார்.**

கு. சிவனேசன்
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (75054)

## உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய முயற்சி

கொழும்பு, ஏப்ரல் 5
ஐ. தே. கவின் எம். பியான டாக்டர் ராஜிதசேனரத்ன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யப் போவதாக அரச சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர் ராஜினாமாச் செய்யக் கோரி மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை செல்லுபடியற்றதாக்கும் வகையில் இந்த மனு தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்த அதே வேளையில் கடற்படை, விமானப்படை முதலான அரச நிறுவனங்களுடன் வியாபார ஒப்பந்தங்களை மேற்கொண்டதற்கு எதிராக நீதி அரசமைப்பு விவகார பிரதி அமைச்சர் நிலான் பெரேரா சேனாரத்னாவுக்கு எதிராக மனு ஒன்றைத் தாக்கல் செய்ததும்—

அவர் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்ததும்—

தெரிந்தவையே. (இ-3-க)

## வீதியோரம் கள் விற்பனை

காரைநகரில் கள் விற்பனை செய்வோர் தவறணைகளில் வைத்து விற்பனை செய்யாது வீதி ஓரங்களிலும், மக்கள் குடிமனைப் பகுதிகளிலும் வைத்து விற்பனை செய்வதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-173)

## வீதி திருத்தும் வேலைகள் பூர்த்தி

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்குச் செல்லும் வீதி திருத்தும் வேலைகள் இன்னும் ஓரிரு தினங்களில் முடிவடைந்து விடும் எனவலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

இதேவேளை —

சுழிபுரம் — பண்ணாகம் வீதியைத் திருத்தும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## வாசகர் திருமுகம்

### ஒற்றுமைவராதா?

யாழ்ப்பாணம் 5 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு 5 சிற்றரசர்கள் தான்தோன்றித்தனமாக ஆட்சி நடத்தும் போது எம் சிறார்களின் கல்வியே பாதிக்கப்படுகின்றது இந்த 5 சிற்றரசர்களிடையேயும் ஒற்றுமை வராதா? புதிய கல்விச்சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேளையில் பாடசாலைகளில் கணிப்பீடுகளும் நடத்தப்படுகின்றன. இந்தக் கணிப்பீடுகளும் இந்தக் குடாநாட்டில் 5 விதமாக நடைபெறுகின்றன.

தேசிய கல்வி நிறுவக அறிவுறுத்தல் படிதரம் 9 இன் முடிவில் ஒரு பொதுப் பரீட்சை மாகாண ரீதியாக நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும் என்று உள்ளது. அதேபோல் சில வலயங்களில் கணிப்பீடு நடத்தப்படும் வகுப்புகளுக்குத் தவணை இறுதியில் ஒரு பரீட்சையை நடத்துகின்றனர் ஆனால் எமது வடமராட்சி வலயத்திலோ பாடசாலைகளில் கணிப்பீட்டு வகுப்புகளுக்குத் தவணைப் பரீட்சை நடத்தக்கூடாது என்று வலய அலுவலகத்தால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சையை நடத்திய பெரிய பெண்கள் பாடசாலை அதிபரும் அதிகாரியின் கண்டனத்துக்கு ஆளாகிய துர்ப்பாக்கிய நிலையும் எங்கள் வலயத்திலேயே தவணைப் பரீட்சை வைப்பதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுமா? கல்விமான்களே! நீங்கள் சிந்தியுங்கள். வலயம் வியாபார நோக்கம் கருதாமல் பாடசாலைகளே மாணவர்களுக்குத் தவணை இறுதியில் ஒரு பரீட்சையை நடத்தலாம் என்று அறிவிக்கலாம்தானே, பரீட்சை வைப்பதால் ஒருபோதும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படமாட்டாது. தற்போது யாழ். மாவட்டத்துக்கு என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருப்பதால் அவரின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வருகின்றோம் ஆகவே யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அவர்கள் யாழ். மாவட்டத்தில் கணிப்பீட்டு வகுப்புகளுக்குத் தவணைப் பரீட்சையை நடத்துவதா? இல்லையா? என்பதனைப் பத்திரிகை மூலம் அறியத்தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் எம் சிறார்களின் நன்மை கருதி உடனடியாக இதற்கான விளக்கத்தைத் தரவும்.

வடமராட்சி வலயப்பாடசாலைகளில் கணிப்பீட்டு வகுப்புகளுக்கு பாடசாலைகள் தவணைப் பரீட்சை வைக்கக்கூடாதுஎன்று அறிவித்தல் விடுத்த வடமராட்சி வலய அதிகாரிகளும் ஏன் இப்பரீட்சை வைக்கக்கூடாது? இப்பரீட்சை வைப்பதால் ஏற்படும் குறைபாடுகள் என்ன என்பது பற்றி பத்திரிகை மூலம் விளக்கம்தரவும். சிறார்களின் கல்வியில் உண்மையிலேயே விசுவாசத்துடன் தொழிற்படுவீர்களாயின் நிச்சயமாக இதற்கான பதில்களை அறிவிப்பீர்கள். வித்துவக் காய்ச்சலுடன் தொழிற்படுவீர்களாயின் எருமை மாட்டில் மழைத்துளி விழுவது போல் இருந்துவிடுவீர்கள். எதற்கும் எல்லோரும் பொறுத்திருந்து பார்ப்போம். எந்தக் கணிப்பீடு நடத்தப்பட்டாலும் மாணவர்கள் இறுதியாக ஒரு பொதுவான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவது நிச்சயம். இதனை எந்தக் கல்வி அதிகாரியினாலும் மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது ஆகவே மாணவர்களுக்குத் தவணை இறுதியில் பரீட்சை வைப்பது அவர்களுக்கு ஒரு பயிற்சியாக இருப்பதுடன் அதனால் நன்மையும் ஏற்படும்.

பாதிக்கப்படும் சிறாரின் பெற்றோரான

கே மதன்

வடமராட்சி

### கல்விக் கல்லூரி அனுமதியில் குளறுபடி ஏன்?

தேசிய கல்விக்கல்லூரி அனுமதிக்கான நேர்முகப்பரீட்சைகள் அண்மையில யாழ்ப்பாணத்தில் நடைபெற்றமை யாவரும் அறிந்ததே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் 'உதயன்' பத்திரிகை வாயிலாக வெளிவந்தது தெரிந்ததே ஆனால் இந்த அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் ஆங்கிலப் பாடக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களின் பெயர்களைத் தவிர ஏனைய கற்கை நெறிகளுக்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் ஆங்கில பாடத்துக்கு நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் ஓர் எழுத்துப் பரீட்சை வைத்து அதன் பின்னரே மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவது வழக்கம். ஆனால் இம்முறை இப்படியான எந்தப் பரீட்சையும் யாழ். மாணவர்களுக்கு நடத்தப்படவில்லை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவும் இல்லை. இதில் யாழ். கல்வி நிர்வாகம் அக்கறை இன்றி இருப்பது ஏன்?

ஏனைய மாவட்டங்களில் இதற்கான எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன நடத்தப்பட்டுவிட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அப்படியிருக்க யாழ். மாணவர்களின் அனுமதியில் மட்டும் ஏன் இந்தப் பாராமுகம்? இதில் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் அக்கறை எடுப்பார்களா? எம் போன்ற மாணவர்கள் கல்வி வாய்ப்பைப் பெற நடவடிக்கை எடுப்பார்களா?

இத்தகைய செயலால் எத்தனையோ மாணவர்கள் கல்வி ரீதியாகமட்டுமன்றி உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம். ஸ்ரீ திரிவேணி.

வடக்கு-கிழக்கு

# டாக்டர்கள் எல்லோருக்கும் இரட்டிப்பு இடர்காலக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச வைத்திய சாலைகளில் கடமையாற்றும் டாக்டர்கள் அனைவருக்கும் இரட்டிப்பு மடங்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்குவதற்கு சுகாதார அமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தென்பகுதி டாக்டர்களுக்கு மட்டும் இந்த இடர்காலக் கொடுப்பனவு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது.

சுகாதார அமைச்சின் இந்த முடிவுக்கு ஆட்சேபம் தெரிவித்த வடக்கு — கிழக்கு டாக்டர்கள், இது தொடர்பாக அண்மையில் சுகாதார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துப்பேச்சு நடத்தினார்கள்.

இப்பேச்சுக்களின் பின்னர் வடக்கு — கிழக்கில் கடமை ஆற்றும் டாக்டர்கள் அனைவருக்கும் இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்தக் கொடுப்பனவு தொடர்பாக அமைச்சரவை முடிவு செய்த பின்னர் திறைசேரியிலிருந்து நிதி பெற்று கொடுப்பனவை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

## 9 ஆம் வருட நினைவஞ்சலி



அன்னை மடியில் 04 — 06 — 1966

ஆண்டவன் பிடியில் 17 — 03 — 1991

அமரர்

**சிவபுரநாதர் சிவராசா** (சிவன்)

(பாதுகாப்பு ஊழியர், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்)

திதி: 5 - 4 - 2000

உன்னையே எண்ணி எண்ணி
ஒன்பது ஆண்டைத் தள்ளினாலும்
அன்பனே நீ எங்கள் ஆருயிர் அல்லவா?
இறையவன் நீ என என்றென்றும் பூசிப்போம்!
இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு நன்றி!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உம் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அக்கா, மருமகன்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(75074)

## 16 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



**அமரர் அருணாசலம் மீனாட்சிசுந்தரம்**

விண்ணில் 1925-06-16

மண்ணில் 2000-03-23

செல்வச்சந்நிதி வல்லை அம்மன், சிவன் தேவஸ்தான தவில் வித்துவான் அருணாசலம் மீனாட்சி சுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், மதிய போசனமும் (06—04—2000) நாளை வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீ. கோவிந்தராஜன்
(நாதஸ்வரம்)

செருடாவில்,
தொண்டைமானாறு.

(75988)

## கசிப்பு விற்றவர் சிக்கினார்

நல்லூர், ஏப்ரல் 5

குருநகர் றெக்கிளமேசன் வீதியில் கசிப்பு விற்ற ஒருவரை சென். றோக்ஸ் சனசமூக நிலைய உறுப்பினர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து யாழ். பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (இ-103)

## திருமணமானவர் ஏமாற்றி மறுமணமாம்

கைதடி, ஏப்ரல் 5

திருநெல்வேலியைச்சேர்ந்த திருமணமான இருபிள்ளைகளின் தந்தை ஒருவர் திருமணமாகாதவராக நடித்து தரகர்கள் மூலம் கைதடியில் மீண்டும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இரண்டாவது திருமணம் மூலம் சம்பந்தப்பட்ட நபர் ஒரு லட்சம் ரூபா சீதனமாகப் பெற்றுக்கொண்டார் என்றும் சொல்லப்படுகிறது.

தற்பொழுது இந்த நபர் சாவகச்சேரிப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சூத்திரதாரிகளான தரகர்கள் பொலீஸாரினால் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். (இ-74)

## கட்டுரைப்போட்டி

அச்சுவேலி, ஏப்ரல் 5

உலக பூமிப்பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர் – ஆசிரியர் மட்டத்தில் கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

பிராந்திய மாற்றீடு மேம்பாடு ஒத்துழைப்பு நிறுவகம் உலக பூமி பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர் ஆசிரியர் மத்தியில் கட்டுரைப் போட்டியை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

கட்டுரைப்போட்டி தொடர்பான விவரங்கள் பாடசாலைகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், மாணவர்கள் கட்டுரை ஆக்கங்களை "பிராந்திய மாற்றீடு மேம்பாடு நிறுவகம், மட்டக்களப்பு" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக பூமிப் பாதுகாப்பு தினம் ஏப்ரல் 22 ஆம் திகதியாகும். [க-11]

## வருடாந்த கும்பாபிஷேக தினம்

தவத்திரு முருகேசு சுவாமிகள் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயப் புனரமைப்பை முன்னின்று நடத்திய வகையில், வரும் கும்பாபிஷேகம் நாளை 06—04—2000 வியாழக்கிழமை வெகுவிமரிசையாக நடைபெற உள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகமும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அறுபத்து மூவர் குருபூசையும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்பர்கள், அடியார்கள் அத்தினத்தில் வருகை தந்து முருகன் அருளைப் பெற்று உய்வீர்களாக!

தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின்
அடியார்களின் சார்பில்

(சி/ 11640) ஆ. அருணாசலம்

## முயற்சி
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

## 1999 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள்

எமது பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

- நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல்
- தையல் இயந்திரம் திருத்துதல்
- தட்டச்சு இயந்திரம் திருத்துதல்
- வயறிங், றிவைண்டிங்
- ரீவி., றேடியோ திருத்துதல்
- உடை அமைத்தல்
- தமிழ்த் தட்டச்சு
- தமிழ்த் தட்டச்சு, சுருக்கெழுத்து
- ஆங்கிலத்தட்டச்சு
- புத்தகம் கட்டுதல்

இதற்கான சான்றிதழ்களை 10 - 04 - 2000 அன்று காலை 10.00 மணிக்குப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அ. நல்லதம்பி
தலைவர்.

[சி/11630]

## 2000 ஆம் ஆண்டு சேவைகள் வழங்குவதற்கான விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்தல்

2000 ஆம் ஆண்டு கீழ்க் குறிப்பிடப்படும் சேவைகளை வழங்குவதற்கு உரிய பொருத்தமான ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் எனது அலுவலகத்தில் 2000—04—26 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**சேவைகள்**

1. வெல்டிங் வேலைகள்.
2. மின் பிறப்பாக்கி திருத்த வேலைகள்.
3. வாகனத் திருத்த வேலைகள்.
4. கட்டட அமைப்புத் திருத்த வேலைகள்.

வேண்டிய விண்ணப்பங்களை ரூபா 100 பெறுமதியான முகாமையாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட தபால் காசுக் கட்டளையை எனது அலுவலகத்தில் 2000—04—26 ஆம் திகதிவரை கையளித்துப் பெற்றுக் கொள்ளலாம்,

1. ஒவ்வொரு சேவைக்கும் ஒவ்வொரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. பொது நியந்தனைகள் அத்துடன் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றிய விவரங்கள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும்,
3. விண்ணப்பங்கள் மதிப்பீடு ( EVALUATION ) செய்யப்பட்டு பொருத்தமானவை மட்டும் பதிவு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
4. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பிரதிப் பொது முகாமையாளர்
(வடமாகாணம்)

பி.பொ.மு (வ) அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 11638)

## மணிக்குரல் விளம்பரசேவையின்
## 27 ஆவது ஆண்டு விழா

எதிர்வரும் 13 ஆம் திகதி வருடப்பிறப்பன்று யாழ். மத்திய கல்லூரியில்

* நதியாவின் – பாட்டுக்குப்பாட்டு
* பவானியின் – தேனிசை மழை
* பொபி ஸ்ருடியோவின் – பிறேக்டான்ஸ்
* V.S.P லஞ் ஒயில் ஆதரவில் – மாபெரும் இன்னிசை விருந்து
* சாரங்காவின் – ராஜராகம்

ரிக்கெட்டுகள் பெற்றிட: நதியா நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

### மணி வீடியோ

52, மாட்டின் றோட், யாழ்ப்பாணம்.
கட்டணம் 25/-, 20/-

**பெண் அறிவிப்பாளர் தேவை.** குரல் வளம் உள்ளவர்கள் எதிர்வரும் 09-04-2000 அன்று காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வரவும்.

விளம்பர அன்பளிப்பு:-
சுப்பர்ஸோ வீடியோ ஓடியோ & கலர்லாப்
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(C/11641)



**BEACON** (யாழ்நகர்)
துரித மீட்டலுடன் கூடிய வினாவிடை வகுப்பு

## A/L 2001 LOGIC

ஆரம்பம் 08-04-2000 சனி 12 மணி
ஆசிரியர்:
எஸ்.எஸ். மனோகரன்

(75093)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் (09-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிமுதல் 10.48 மணிவரையுள்ள சித்தயோகமும் ரோகினி நட்சத்திரமும் கூடும் சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரி

### செல்வி பபித்தா

அவர்களுக்கு பூப்புனித நீராட்டுவிழா நடத்த இறையருள் கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

திரு. திருமதி செ. ஸ்ரீசந்தனராஜா தம்பதிகள்
No. 7, இராஜேஸ்வரி இல்லம்
அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

முக்கிய குறிப்பு:- பத்திரிகை அறிவித்தலைத் தவிர்ந்த தனிப்பட்ட அழைப்பு இல்லை.

(75102)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 - 11 - 1912 | 05 - 04 - 1998 |

**அமரர் R.K. கந்தையா**

திதி:- 12-05-2000

அன்போடுறவனைத்து ஆசையோடுடமை வளர்த்து
இங்கு எமை ஏங்கவிட்டு ஈசனடி நாடினையே!
உமை இன்று நாம் பிரிந்து ஈராண்டு ஓடினதே
ஊசலாடுகின்றோம் உமைக் காண நாமிங்கே!!

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

துணுக்காய்,
வளலாய்.

(C/11645)

உ
ஓம் கணபதி

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனி மாதம் 24 ஆம் நாள் (06-04-2000) வியாழக்கிழமை காலை 8.24 மணி முதல் 10.25 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **பகீரதன்** | **புவனலோஜினி** |
| (நோர்வே) | (மகாவலி அபிவிருத்தி அமைச்சு) |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

எல்லாம் வல்ல இறைவன் அருள்கொண்டு கொழும்பு-13 ஸ்ரீ கதிரேசன் வீதி இல. 168 இல் அமைந்துள்ள சிலோன் வீரசைவ சங்கத்தில் திருமணக்கல்யாண தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

திரு. திருமதி சண்முகநாதன்
கிராமக்கோட்டுச் சந்தி,
பலாலி.

திரு. திருமதி திருநாவுக்கரசு
பொன்னையா ஒழுங்கை
ஆனைக்கோட்டை.

திரு. திருமதி சின்னத்துரை
இல. 69, அட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13.

திருமதி மோகனதாஸ்
வெள்ளவத்தை.

(75089)

# மரண அறிவித்தல்கள்

## வீரவாகு கந்தையா மாணிக்கவாசகர்

சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு கந்தையா மாணிக்கவாசகர் நேற்று (04-04-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வீரவாகு கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நாகநாதர் - தங்கப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், வீரவாகுதேவர், சின்னத்தம்பி, சின்னையா (முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி), சரவணமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பவளராணி (பிரான்ஸ்), புஸ்பராணி, இந்திராணி, வசந்தகுமார் (சுவிஸ்), சுமதிராணி (சுவிஸ்), வைஜந்திக்குமார் (பிரான்ஸ்), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமலிங்கம் (பிரான்ஸ்), சிவன் செயல் (சுவிஸ்), சந்திரசிங்கம், நந்தினி (சுவிஸ்), தவராசா (சுவிஸ்), நீனா (பிரான்ஸ்), நிமலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருஞானசம்பந்தன் (பிரான்ஸ்), கிரிஜா (பிரான்ஸ்), கங்காசுதன் (பிரான்ஸ்), கவிதா (பிரான்ஸ்), கேமலதா - ரமணன் (ஜேர்மனி), காந்தரூபன் (பிரான்ஸ்), வினோதா, ரஜிதா, மேனகா - விக்கினேஸ்வரன், யமுனா - ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி), சுமிதா, லெனின், தர்மினி (சுவிஸ்), தனுஜன் (சுவிஸ்), தர்சினி (சுவிஸ்), யதுர்சன் (சுவிஸ்), யதுசா (சுவிஸ்), தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், மகிராவின் பூட்டனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (05-04-2000) புதன்கிழமை பிப. 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**ம.சந்திரசிங்கம்**
(மருமகன்)

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(75103)

## ஐயாத்துரை பரஞ்சோதி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பரஞ்சோதி நேற்றுமுன்தினம் (03-04-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஐயாத்துரை பூரணம் - ஐயாத்துரை மனோன்மணி (சிறிய தாய்) ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற லீலாவதி, கனகலிங்கம், ஜானேஸ்வரன், மோகனதாஸ், கிருபாகரன், நந்தினி, பாலச்சந்திரன், சுகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தையா - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னலக்ஸ்மியின் அன்புமிகு கணவரும், வல்லிபுரம் - சின்னையாவின் மருமகனும், பொன்னுத்துரையின் மைத்துனரும், நிர்மலாதேவி (ஜேர்மனி), ஸ்ரீபாஸ்கரன் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைகுந்தவாசன், சியாசினி, சுதாஸ்கலா, அம்பிகைபாதன், உதயகுமார், ரூபாபதி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் மைத்துனரும், நவரத்தினத்தின் அன்புச் சகலனும், வினித்தா, சுஜித்தா, நிருஜா, அருண்யா, அருணன், கஜானா, மயூரதி, நளினாசினி ஆகியோரின் அன்புமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-04-2000) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ப.அம்பிகைபாதன் (ராசன்)**
(சோதி களஞ்சியம், கோண்டாவில் கிழக்கு)

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(75091)

## மக்களை வெளியேற்றுமாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருதங்கேணி மற்றும் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் ஆபத்தான நிலையில் சிக்கிக் கொண்டுள்ளனர். இந்த மக்கள் அந்தப் பகுதிகளிலிருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கு செஞ்சிலுவை சர்வதேசக்குழு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று கிளாலி சென் அன்ரனீஸ் ஆலயத்தில் தற்போது தங்கியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

யுத்த காலத்தில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தற்போதைய நிலையிலும் அவ்வாறான உதவிகளைச் செய்யமுன்வரவேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. கடித்தின் பிரதிகள் யாழ்.அரச அதிபருக்கும், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தக் கடிதத்தின் பிரதி ஒன்று யாழ். மாவட்ட கட்டளைத் தளபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது. யுத்தப்பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்வதற்குப் படையினரும் உதவவேண்டும் எனக்கோரும் கடிதம் ஒன்றும் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.தற்போது மருதங்கேணி கிளாலி மற்றும் பளைப் பகுதிகளில் மக்கள் தங்கியிருக்கும் இடங்களில் யுத்தம் நடைபெறவில்லை. எனவே மக்கள் இந்த சமயத்தில் அங்கிருந்துவெளியேறுவதற்கு இராணுவம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## பளை மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் தத்தமது வீடுகளிலும் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளதாகவும் -

தத்தமது வீடுகளில் இருந்து குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்த 325 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 114 பேர் கிளாலி காணிக்கை மாதா கோயில் மற்றும் கிளாலி அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் படையினரால் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் -

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

கிளாலியில் மக்கள் தங்கியுள்ள பகுதியிலிருந்து அரை மைல் ஒரு மைல் தொலைவில் கடற்கரைப்பகுதியில் ஷெல்கள் அடிக்கடி வீழ்வதால் அவர்கள் பயப்பிராந்தியுடனேயே நேரத்தை கழிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஜ-3-5-117)

# ஆயர் வன்னி விஜயம்

கொழும்பு,ஏப்.5

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் மக்கள் படும் இன்னல்கள் குறித்து நேரில் அறிவதற்காக யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் நேற்று அப்பகுதிக்குச் சென்றுள்ளார்.

கடந்த வாரம் கண்டியில் நடந்த ஆயர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற யாழ். ஆயர் அங்கிருந்து நேற்று வன்னிக்குப் புறப்பட்டார்.

நேற்று மாலை மடு போய்ச் சேர்ந்த அவர் இன்று அங்கிருந்து இராணுவக்கட்டுப்பாடற்ற ஏனைய இடங்களுக்குச் செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மத ஆராதனைகளில் பங்கு பற்றும் ஆயர் அங்குள்ள மக்களின் சேம நலன்களையும் விசாரிப்பார். (ஜ-3)

## நிவாரணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னம் சென்றசமயம் வாகனத்தைச் சூழ்ந்துகொண்ட மக்கள் ஆவேசத்துடன் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

"எங்களுக்கு நிவாரணமோ, உணவோ தேவையில்லை. இந்தக் கொடூர யுத்தச் சூழலுக்கு மத்தியில் இருந்து தப்பிச்செல்ல - வெளியேற- எங்களுக்கு அனுமதி பெற்றுத் தாருங்கள். அதுதான் அவசியமாக- அவசரமாக- எமக்குத் தேவைப்படுகிறது. உங்கள் நிவாரணம் எமக்குத் தேவையில்லை" என்று மக்கள் ஆக்ரோஷத்துடன் குரல் எழுப்பினர்.

நிவாரணப் பொருள்கள் தந்து எங்களை நிரந்தரமாக இங்கு மனித கேடயங்களாக நிறுத்தப் போகின்றீர்களா? என்றும் -

இடம்பெயர்ந்தோருக்கான உதவித்தொகை என நீங்கள் தர முன்வந்திருக்கும் 2 ஆயிரம் ரூபா எங்களின் சடலங்களை கொண்டு செல்வதற்கான பிரேதப் பெட்டிகளை வாங்குவதற்காகவா? என்றும் - அவர்கள் கேள்வி எழுப்பினர் . அதிகாரிகள் கொண்டுவந்த பொருள்களை ஏற்க மறுத்த பொதுமக்கள். அவர்கள் சென்ற "பிக்கப்" வாகனத்தையும் அங்கு இருந்து வெளியேறவிடாது தடுத்துவைத்தனர்.

இதைத் தொடர்ந்து "பிக்கப்" வாகனத்தை அங்கேயே கைவிட்டு லொறிகளில் எடுத்துச் சென்ற பொருள்களை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து விட்டு செயலக அதிகாரிகள் யாழ். திரும்பினர்.

## மின்கம்பங்கள் தகர்ப்பு

தம்பலகாமம் கேணியடிப் பகுதியில் அமைந்திருந்த இரண்டு மின் கம்பங்கள் இனந்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் இரவு 12.30 மணியளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. (ஜ-3-150)

## கண்ணீர் அஞ்சலி

சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர்
Dr. பொன்னம்பலம் இராமநாதன்
அவர்களின் அன்புத்தாயார்



**திருமதி பொன்னம்பலம் கனகம்மா**
(கனகதாரா)

அவர்கள் நேற்று (04.04.2000) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சித்தமருத்துவத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்,*
*கைதடி.*
*– 2ஆம் வருட மாணவர்கள்*

(75106)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி சு.றொஷாந்தியின்
அன்புத் தந்தை
**திரு. சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வணிக முதற்தேர்வு (2000) மாணவர்கள்,*
*பட்டப்படிப்புகள் கல்லூரி.*

(c/11651)

## அறிவித்தல்

பளை

**பனை, தென்னை வள அபிவிருத்திக் கூ.சங்கத்தின் தலைமைக் காரியாலயம்**

மேற்படி தலைமைக் காரியாலயம் கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியிலுள்ள திரு ப.முதலித்தம்பி என்பவரது வீட்டில் எதிர்வரும் 07-04-2000 திகதி முதல் தற்காலிகமாக இயங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அங்கத்தவர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

– *தலைவர்*

(75107)


**SALE! SALE!! SALE!!!**

**மாபெரும் மலிவு விற்பனை!**
**யாழ். சீமாட்டியின்**
**புத்தாண்டு மலிவு விற்பனை!**

*அனைத்து ஜவுளித் தினுசுகளும்*
*என்றும் எங்கும் கிடைக்காத விசேட கழிவு*
*விலையில்*
*விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.*

* *மொத்த விலையிலேயே சில்லறை விற்பனை*
* *வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.*

சீமாட்டி புடைவைக்கடல்
*122, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்*
**T.P. :- 2196**
**FAX :- 2102**

**மங்கை சில்க்**
*15, நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

(C/11646)

**விக்னா**
**கல்விநிறுவனம்**
**O\L**
**DAY CLASS**
பிரிவு 2
8.30 - 2.00
ஆரம்பம்:- 10-04-2000
(7506)

**A/L 2000**
**கணக்கீடு**
**D. SAM**
*கிரயக்கணக்கீடு*
ஆரம்பம்:-
08-04-2000
பிரிவு - I - 12 - 1
பிரிவு - II - 1 - 2
**D. M. I.**
யாழ்நகர்.
* அனுமதிகளை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
(C/11561)

SALE SALE SALE SALE

*விரையுங்கள்*
**'ராம்சில்க்'**

※ சேட்ஸ் வகைகள் 250/= முதல் 450/= வரை
※ றெடிமேட் ரவுசர் 36-38-39-40 250/=
※ கவுண் துணிவகைகள்
※ றெடிமேட் கவுண்கள், ஸ்கேட் அன் பிளவ்ஸ்
※ சாறி 250/= முதல் 750/= வரை
※ ரவுசர் துணிகள் 250/= முதல் 450/= வரை

*விரையுங்கள்!*
**'ராம்சில்க்'**
*109, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(V.S.B. குறாப் அருகில்)*

S A L E S A L E S A L E S A L E

(C/11653)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாவதி ஜெகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்துக் கல்லூரி)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை, கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி ஜெகநாதன் அவர்கள் நேற்று (04-04-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகநாதனின் அன்பு மனைவியும், ஆனந்தியின் அன்புத் தாயாரும், திலகவதியின் (கனடா) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குமாரசாமியின் மைத்துனியும், பொன்னம்பலத்தின் அன்பு மாமியாரும், விக்னேஸ்வரனின் அன்பு அண்ணியும், பபி (கனடா), பிரபா (நோர்வே), றஞ்சி (லண்டன்), நகுலன் (லண்டன்), றாஜி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-04-2000) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (பழைய நேரம்) அன்னாரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் துண்டிமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆனந்தி (மகள்)
பொன்னம்பலம் (மருமகன்)

*15/2, ஈச்சமோட்டை,*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(75110)

### திருமதி அரியரட்ணம் புவனேஸ்வரி

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இல.10, ஓடை லேன், வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரியரட்ணம் புவனேஸ்வரி நேற்று (04-04-2000) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா அரியரட்ணம் (பக்ட்றி ஒபிஸர்) அவர்களின் அன்பு மனைவியும் கிருஷ்ணதாசன் (கனடா), குமாரதாசன் (கண்டி), பத்மதாசன் (ரஞ்சன் கொமினிக்கேஷன், கோண்டாவில்), சிவதாசன் (உரிமையாளர், S&S ASSOCIATES கொழும்பு), வசந்தா, நளாயினி, சண்முகதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் தேவகி (கனடா), பேபின், ஸ்கந்தபூசணி (ஆசிரியை ராமகிருஷ்ண மகாவித்தியாலயம், கோண்டாவில்), சுபத்திரா (ஹட்டன் நஷனல் வங்கி, கொழும்பு), ஆனந்தகுமாரசாமி (இந்திராஸ்ரோர்ஸ், மாங்குளம்), அருணகிரி (வலி.மேற்கு பிரதேசசபை), சாமினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் திவாகரன், சுகன்யா (கனடா), சுரேஸ், நிலுஷி, சிந்துஜா, ஆனந்த்துவாரகா, அசோக், அகிலன் (யாழ்.இந்துக்கல்லூரி), ருவிங்கா, மேவான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-04-2000) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.30 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீ பத்மதாசன் (மகன்)
இ.அருணகிரி (மருமகன்)

*இல.10, ஓடை லேன்,*
*வண்ணார்பண்ணை.*

(75109)

### நாகரத்தினம் ஜெயக்குமார்

சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு.திருமதி நாகரத்தினம் தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜெயக்குமார் 02-04-2000 ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் சுபாசினி, நந்தினி, ரவிக்குமார்(பாரீஸ்), நளினி ஆகியோரின் அன்புச் சகோதரன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-04-2000) புதன்கிழமை 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொழும்பிலுள்ள கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிவாகரன்
(மைத்துனர்)

(C/11655)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.